1046 046

3] வருஷச் சந்தா ரூ. 1 8 0. ஸஞ்சிகை [8

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ||

# ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ

(மாதப் பத்திரிகை.)



27 AUG 193

பத்திராதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A., B.L.,

(ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)

ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்

பிரசுரம் செய்ய...

1937-வரு ஆகஸ்டு-மீ [ ஆவணி-மீ

JL
Q2ன21/N3555.
N37.3.8.
189912
189912

## விஷயம்.


1. ஸ்ரீகண்ணனும் ஸ்ரீதேசிகனும் 1—4
2. ஸுபாஷிதநீவீ [தொடர்ச்சி] 57—80
3. ரக்ஷாவிமர்சம் [தொடர்ச்சி] 37—46


ஸ்ரீ:

# அறிவிப்பு.

சென்ற மாதத்தில் ஸ்ரீ கோதாஸ்துதியின் உரை பூர்த்தியடைந்தது. ஷை ஸ்துதியினுடையவும் உரையினுடையவும் பெருமையை அதன் முகவுரையில் காணலாம். இனிய தமிழ் நடையில் இவ்வுரை வெளிவந்ததற்குக் காரணபூதர் சென்னை பக்கிங்ஹாம் கர்னடிக் மில்லில் பஹுகாலம் உத்யோகத்திலமர்ந்திருந்தவரும், தற்காலம் ஸ்ரீசின்னகாஞ்சீபுரம் ஸ்ரீபாதுகாச்ரமத்திலிருப்பவருமான தேரழுந்தூர் ஸ்ரீமத் ஆண்டவன் திருவடி டி. ஆர். ராஜகோபாலாசார்யஸ்வாமி என்னும் மஹனீயர். இவ்வுரை ஸ்ரீதேசிகஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணியின் 1936-ம் வருஷத்திய மூன்றுவது ஸஞ்சிகையில் ஆரம்பிக்கப்பட்டது. ஷை ஸஞ்சிகை கிடைத்தவுடனேயே ரூ. 25 ஷை ராஜகோபாலாசாரியர் கொடுத்துதவினர். இதற்குக் காரணம் ஸ்ரீஆண்டாள் திருநக்ஷத்திரமாகிய திருவாடிப்பூரத்தில் ஸ்ரீமத் ஆண்டவன் ஸந்நிதியில் ஷையாருக்கு ப்ரபந்யாஸம் நடந்ததேயாகும். அதற்கறிகுறியாக இக் கைங்கர்யத்தை இப்பெரியார் ஏற்றுக்கொண்டது பொருத்தமுளதே! சென்ற மாதம் திருவாடிப்பூரத்தில் இக்கைங்கர்யம் பூர்த்தியடைந்ததும் மிகப் பொருத்தமுளதே! (ப-ஸ்ரீ)

ஸ்ரீகோதாஸ்துதி எளிய தமிழுரையுடன் (கிளேஸ்) ரூ. 0-12-0
ஷை மூலம் (காகரம்) 0—1—0

கிடைக்குமிடங்கள்:—

1. ஸ்ரீதேசிகஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை, ஸ்ரீரங்கம்.
2. ஷை கிளைசபை, 29, கிருஷ்ணபவனம்; புரசைவாக்கம், சென்னை.
3. ஸ்ரீ கோமளாம்பா பிரஸ், கும்பகோணம்.

## விஷயம்.


1. தயாசதகம் [தொடர்ச்சி] 25—32
2. பாதுகாஸஹஸ்ராவதார தத்வ விமர்சம் [தொடர்ச்சி] 113—120
3. வாத்ஸல்யார்த்த விவரண விமர்சம் [தொடர்ச்சி] 139—154
4. பதிலுரைகள் 5—8


# விஜ்ஞாபனம்.

1935ம் வருஷத்திய சந்தாவை செலுத்தாத மெம்பர்களுக்கும், 1936வரு ஜனவரி மீ முதல் ஆரம்பித்திருக்கும் 2வது ஸம்புடம் முதல் ஸஞ்சிகை முதல் தொடர்ச்சியாகவே அனுப்பப்பட்டு வருகிறது. பத்திரிகை குறிப்பிட்ட காலத்தில் பிரதிமாதமும் வெளிவருவது சந்தாப்பணத்தின் உதவியாலேயாகையால் மெம்பர்கள் தங்கள் பாக்கிச்சந்தாவை கூடியசீக்கிரம் "காரியதரிசி, ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை, ஸ்ரீரங்கம்" என்னும் விலாஸத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பியோ, அல்லது சென்னை, செங்கற்பட்டு, காஞ்சி, திருவஹீந்திரபுரம், சிதம்பரம், கும்பகோணம், தஞ்சாவூர், தேவகோட்டை, மதுரை முதலிய ஊர்களில் ஸபையாரால் நியமிக்கப்பட்டிருக்கும் ஏஜண்டுகளிடமோ செலுத்தி, ரசீது பெற்றுக்கொள்ளும்படிக்கும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கோதாஸ்துதி வ்யாக்யானம் வெளிவரும்.

கார்யஸ்

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸ...

1004

2] வருஷச்சந்தா ரூ. 1 8 0. [ஸஞ்சிகை 2

ஸ்ரீ:

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

# ‘ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ’

(மாதப் பத்திரிகை.)



ரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,
சிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)
3. ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணஸபையாரால்
பிரசுரம் செய்யப்படுவது.
1936-ம் வருஷம் பெப்ருவரி-மீ [மாசி-மீ

॥ ஸ்ரீ: ॥

ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥

# ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ.

(ஓர் மாதப்பத்திரிகை)

ஸம்புடம் 3 } ஈச்வர-ஸூ ஆவணி-மீ { ஸஞ்சிகை 8

ஜீவநம் ஜகதாம் ஜீயாத் திவ்யமத்புதமஹ: ।
ஸூக்தம் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய வேங்கடேஶாஹ்வயம் மஹ: ॥

## குறிப்புகள்.

## ஸ்ரீகண்ணனும், ஸ்ரீதேசிகனும்.

“ வந்தே ப்ருந்தாவநசரம் வல்லவீஜநவல்லபம் ।
ஜயந்தீஸம்பவம் தாம வைஜயந்தீவிபூஷணம் ” ॥

இந்த ஆவணிமீ 14உ (29—8—37) ஸ்ரீஜயந்தி. ‘மாஸாநாம் மார்கஶீர்ஷோஹம்’ என்று கண்ணன் தமது சொல்லால் சிறப்பித்தது மார்கழிமாதத்தையேயாயினும், தமது திருவவதாரத்தால் மேன்மையுற்று விளங்கச்செய்தது இவ்வாவணி மாதத்தைத்தான். ஜயந்தியென்றால் கண்ணன் திருவவதரித்த தினத்தையே குறிக்கும். இப்போது பொதுவாக அவதாரதினங்களை ஜயந்திசப்தத்தால் ந்ருஸிம்ஹஜயந்தி, பரசுராமஜயந்தி, வாமனஜயந்தி, ஸுதர்சனஜயந்தி, வைநதேயஜயந்தி என்று வ்யவஹரிக்கத்தொடங்கியிருக்கிறோமாயினும், உண்மையில் ஜயந்திஸம்பவன் கண்ணன்தான்.

(ஒளிக்கும்) கருத்துடையவர் கறக்கும் கருத்துடையவராகித் தாமே காமதேனுவைப்போலிருந்து கன்றுகளாகிய நமக்கிரங்கி நினைத்து முலைவழியே நின்றுபால் சோர்ந்து நம்முள்ளத்தை நனைத்து நற்கதியையடைவிக்கிறார். அங்கே பாடியது ஒரு கீதை' இங்கே '𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌤𑍁 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍' இவ்வளவு என்று முழுதும் எண்ணவல்லார் யாவர்? 'ஒரொன்று தானே யமையாதோ' என்றுமட்டில் தேறியிருக்கப் ப்ராப்தம். பகவத்கீதையின்முடிவில் வேதாந்தம்ஸம்ஹாரஸாரதியின் தயாப்ரவாஹம் வெள்ளமிட்டோடுவதைக் கண்டுபிடித்துச் சரமச்லோகத்திற்குத் தக்கபடி வ்யாக்யானமிட்டு, வைசம்பாயன சௌனகாதிச்ரேஷ்டர்களெல்லாம் சிர:கம்பனம் செய்யும்படி தஞ்சப் பாகதியைத் தந்தருளிய உபகாரம் ஸ்வாமி தேசிகன் செய்தருளியதல்லவோ? சரணாகதி சாஸ்த்ரத்தை உபதேசித்துப் போந்த க்ருஷ்ணாவதாரமும் நம் வேதாந்தாசார்யர் திருவவதரித்து அந்த சாஸ்த்ரத்தைப் பரிஷ்கரித்து வகுத்துவைக்காவிடில் என்ன பலன் அளித்திருக்கும் என்பதை எல்லாரும்யோசித்துப்பார்க்கலாம். "ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி ஒருநினைவாலீன்ற உயிரெல்லாமுய்ய மன்னவர்க்குத் தேர்ப்பாகன்தானேசொன்ன தனித்தருமத்தை,அந்தணரந்தியர் எல்லையில் நின்ற வனைத்துலகுக்கும் வழங்கிய வள்ளல் நம் தேசிகனுகையால் பூர்ணாவதாரமாகிய க்ருஷ்ணாவதாரம் பரிபூர்ணமாகியது ஸ்வாமி தேசிகனாலேயே என்று பெரியோர் பணிப்பதுண்டு.

ஸ்வாமி கண்ணன் திருவவதாரத்தில் இவ்வளவு ஈடுபாடுடையவராகையால், கண்ணனையே ப்ராபகமும், ப்ராப்யமுமாய் அநுபவித்து அவனையன்றி யில்லை இங்குமங்கும் என்று தோன்றும்படி பாசுரம் பாடுகிறார்:—

"அறியாத இடைச்சியரும் அறியும் வண்ணம்
அம்புயத்தாளுடன் அந்நாளவதரித்த
குறை யாதுமில்லாத கோவிந்தா நின்
குரைகழற்கீழ் அடைக்கலமாம் குறிப்புத் தந்தாய்
வெறியாரும் மலர்மகளும் நீயும் விண்ணில்
விண்ணவர்களடி சூடிருக்கு மேன்மை
குறையாத வினையகற்றி யடிமை கொள்ளக்
குறுக ஒரு நன்னாள் நீ குறித்திடாயே".

தி. ராமஸ்வாமிதாஸது.



ஸம்மதத்தின் கீர்த்தியை ஸஹியாமல் பரமசாந்தரென்று தங்களுக்குப் பிருதம் வைத்துக்கொண்டு ஸம்மதத்தில் ஸாதுக்களிருக்கும் உறுதியை இழுக்கப்பார்ப்பர். 'பதம்' என்பதற்கு காலென்றும், உறுதியென்றும், இருப்பு, ஸ்தானம் என்றும் பொருள்கள். நல்ல தர்சனத்திலிருக்கும் விச்வாஸத்தையும் ஸ்திதியையும் அஸூயாளுக்கள் மஹாசாந்தரென்று பெயர் வைத்துக்கொண்டு இழுக்கப் பார்ப்பதை ஸத்தர்சனத்தை நிர்வஹிப்பவர் நிக்ரஹிப்பார். (22)

𑌗𑌤𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑌾 𑌕𑌿𑌂 𑌤𑌦𑍍𑌗𑌰𑍁𑌡𑌮𑌪𑌿 𑌡𑌙𑍍𑌕𑍇𑌤 𑌚𑌟𑌕𑌃
𑌪𑌿𑌬𑌤𑍍𑌵𑌮𑍍𑌭𑌃 𑌕𑍍𑌷𑌾𑌰𑌂 𑌨 𑌖𑌲𑍁 𑌕𑌲𑌶𑍀𑌸𑍂𑌨𑍁𑌰𑌲𑌸𑌃 ।
𑌖𑌲𑌃 𑌕𑌣𑍍𑌠𑍇 𑌨𑌾𑌦𑌃 𑌸 𑌇𑌵 𑌮𑌶𑌕𑌃 𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌪𑌤𑌿𑌃
𑌕𑌥𑌂𑌚𑌿𑌤𑍍 𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑌤𑌿 𑌨 𑌹𑌿 𑌵𑍈𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌨𑌿𑌯𑌮𑌃 ॥

கதிர்வ்யோம்நா கிம் தத்கருடமபிடங்கேத சடக:
பிபத்வம்ப: க்ஷாரம் ந கலு கலசீஸூநுரலஸ: ।
கல: கண்டே நாத: ஸ இவ மசக: கிந்நரபதி:
கதம்சித் ஸாதர்ம்யம் க்ஷிபதி ந ஹி வைதர்ம்யநியம: ॥(23)

(ப-ரை) 𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑌾 [வ்யோம்நா] - ஆகாசமார்க்கத்தால், 𑌗𑌤𑌿𑌃 [கதி:] - செல்லுகை (பறக்கை) இருக்கட்டுமே, (அதனால்), 𑌚𑌟𑌕𑌃 [சடக:] - ஊர்க்குருவி, 𑌤𑌦𑍍𑌗𑌰𑍁𑌡𑌂 [தத்கருடம்]-அந்த கருடனை, 𑌅𑌪𑌿 𑌡𑌙𑍍𑌕𑍇𑌤 𑌕𑌿𑌂 [அபிடங்கேத கிம்] - ஒக்கப் பறக்குமோ (ஸமமாய்விடுமோ), 𑌕𑍍𑌷𑌾𑌰𑌮𑍍 𑌅𑌮𑍍𑌭𑌃 [க்ஷாரம் அம்ப:] - உப்புஜலத்தை, 𑌅𑌲𑌸𑌃 [அலஸ:]- தீராப்பசிதாகத்தைக்கொடுக்கும் வயிற்றுவ்யாதியுள்ளவன், 𑌪𑌿𑌬𑌤𑍁 [பிபது] - (வேண்டியமட்டும்) குடிக்கட்டும் (அதனால்) (அவன்), 𑌕𑌲𑌶𑍀𑌸𑍂𑌨𑍁𑌃 [கலசீஸூநு:] - அகஸ்த்யராக, 𑌨 𑌖𑌲𑍁 [ந கலு]-ஆகமாட்டானே, 𑌕𑌣𑍍𑌠𑍇 [கண்டே] - கண்டத்தில் (தொண்டையில்), 𑌖𑌲𑌃 [கல:] - உருப்படியில்லாமல் இனிப்பான, 𑌨𑌾𑌦𑌃 [நாத:]-ஸ்வரமானது (இருக்கட்டும்; அதனால்), 𑌮𑌶𑌕𑌃 [மசக:]-கொசு, 𑌸𑌃 𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌪𑌤𑌿𑌰𑌿𑌵 [ஸ: கிந்நரபதிரிவ] - கிந்நரச்ரேஷ்டன்போலாவானோ, 𑌵𑍈𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌨𑌿𑌯𑌮𑌃 [வைதர்ம்யநியம:] - உறுதியான வேற்றுமையென்பதும், 𑌕𑌥𑌂𑌚𑌿𑌤𑍍 𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂,

[கதம்சித் ஸாதர்ம்யம்] - ஏதோ ஒருவிதமான ஒற்றுமையை, 𑌨 𑌕𑍍𑌷𑌿𑌪𑌤𑌿 𑌹𑌿 [ந க்ஷிபதி ஹி] - தள்ளுகிறதில்லையே.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— முன் ச்லோகத்தில் கஜேந்திராழ்வானைக் காக்க சக்ரபாணியாக எழுந்தருளினதைப் பேசுகையில் கருடனை மறக்கக்கூடுமோ ? இங்கே கருடன் பறப்பதைப்பற்றி உடனே பேசுகிறார். 'ஊர்க்குருவி உயரப்பறந்தாலும் கருடனாகுமோ' என்பர். ஆகாயத்தில் பறக்கும் சக்தி கொஞ்சமுண்டென்கிற ஒற்றுமை லேசமுண்டு. ஆயினும் கருடன் சக்தியில் லேசம் வராது. கருடன் வேதமயன், விஷ்ணுபதமென்னும் ஆகாசத்தில் பெருமாளுக்கு வாஹனமாக மங்களமாக ஸஞ்சரித்து ஆர்த்தர் ஸமீபத்திற்குப் பெருமாளை எழுந்தருளப் பண்ணுகிறவர். அவர் ஸ்வரூபமான வேதமும் பெருமாளை நமக்குச் சேர்ப்பிக்கும். நமக்குப் பரமபதத்தை அளிக்கும் ஸங்கல்பம் என்பதை ஸுதர்சனாழ்வாரென்பர். பரமபதமளிக்கும் ஸம்ரம்பத்தை கருடனென்பர். 'பக்ஷீச்வர ஸுதர்சனௌ' என்ற இருவருமிவ்விரண்டுமாவாரென்பது ஆகமங்களைக்கொண்டு ஸூர்யோதயத்தில் ஸாதிக்கப்பட்டது. கஸ்மரமென்னும் உதரரோக முள்ளவன் உப்புடன் தண்ணீரைக் குடித்துக்கொண்டேயிருப்பான். அதனால் அகஸ்த்யராய்விடுவானா? தமிழ்ப்பாட்டுப்பாடும் கவிகள் எல்லாம் ஆழ்வார்களாய்விடுவாரா? அகஸ்த்யருடைய தத்வஜ்ஞானம் எல்லோர்க்கும் வருமா? கொசுவும் உருப்படியில்லாமல் ஸ்வரத்தோடு காதிற்கிட்டப் பாடுகிறது; அதனால் உயர்ந்த கிந்நரனாய்விடுமா ? கந்தர்வர்கள் உரக்கப்பாடுவர், கிந்நரர் முணுமுணுவென்று பாடுவர். 'கிஞ்சித் க்வணத்கிந்நரம்'என்றார் காளிதாஸர். உலகத்தில் எத்தனை பேதமுள்ள பொருள்களுக்கும் ஒரோர் விதத்தில் கொஞ்சம் ஒற்றுமையிருக்கலாம்; அதனால் தாழ்ந்ததையும் உயர்ந்ததையும் ஒன்றாக்கமுடியாது. ஸத்துவம் (இருப்பு) என்பது மூன்று தத்துவங்களுக்கும் பொது. அதனால் அசித் ப்ரஹ்மத்தோடு ஒன்றாய்விடுமோ ? அப்படியேதான் ஜீவனும் ப்ரஹ்மமாகமாட்டான். மற்ற தர்சனங்கள் எம்பெருமானார் தர்சனமாகுமோ ? எல்லாம் தர்சனமென்று பெயருடையனவே. எல்லாம் தத்வங்களை விசாரித்து ஒரோர் முடிவு செய்வனவே. எம்பெருமானார் தர்சனம் வேதாத்மாவான கருடஸம்மதமாயும், மோக்ஷமளிக்கும் ஸம்ரம்பமென்னும் கருடனைப் பெருமாளுடன்



நம் ஸமீபத்துக்கு நயனம் செய்யும்; ஞானஸாரங்களையெல்லாம் உள்ளடக்கிய அகஸ்த்யபாஷா வேதம் வேதங்களுக்கு ஸம்மதமானது. யக்ஷர் கந்தர்வர் கிந்நரர் நாகரென்பர். கானப்ரியரான நாகராஜனான சேஷனுடைய மதம். (23)

𑌨𑌿𑌮𑍀𑌲𑌯𑌤𑍁 𑌲𑍋𑌚𑌨𑍇 𑌨 𑌹𑌿 𑌤𑌿𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑍋 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌃
𑌶𑍍𑌰𑌵𑌃 𑌸𑍍𑌥𑌗𑌯𑌤𑍁 𑌸𑍍𑌥𑌿𑌰𑌂 𑌪𑌰𑌭𑍃𑌤𑌃 𑌕𑌿𑌮𑍁 𑌧𑍍𑌵𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿 ।
𑌸𑍍𑌵𑌯𑌂 𑌭𑍍𑌰𑌮𑌤𑍁 𑌬𑌾𑌲𑌿𑌶𑍋 𑌨 𑌖𑌲𑍁 𑌬𑌂𑌭𑍍𑌰𑌮𑍀𑌤𑌿 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌃
𑌕𑌦𑌰𑍍𑌥𑌯𑌤𑍁 𑌮𑍁𑌷𑍍𑌟𑌿𑌭𑌿𑌃 𑌕𑌥𑌯 𑌕𑌿𑌂 𑌨𑌭𑌃 𑌕𑍍𑌷𑍁𑌭𑍍𑌯𑌤𑍇 ॥

நிமீலயது லோசனே ந ஹி திரஸ்க்ருதோ பாஸ்கர:
ச்ரவ: ஸ்தகயது ஸ்திரம் பரப்ருத: கிமு த்வாங்க்ஷதி ।
ஸ்வயம் ப்ரமது பாலிசோ ந கலு பம்ப்ரமீதி க்ஷிதி:
கதர்த்தயது முஷ்டிபி: கதய கிம் நப: க்ஷுப்யதே ॥ (24)

(ப-ரை) 𑌬𑌾𑌲𑌿𑌶𑌃 [பாலிச:] - அறியாத துணிச்சற்காரன், 𑌲𑍋𑌚𑌨𑍇 [லோசனே] - இரண்டு கண்களையும், 𑌨𑌿𑌮𑍀𑌲𑌯𑌤𑍁 [நிமீலயது] - மூடிக்கொள்ளட்டும். (அதனால்) 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌃 [பாஸ்கர:] - திக்கும் வ்யாபித்த ஒளியையுடைய ஸூர்யன், 𑌨 𑌹𑌿 𑌤𑌿𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑌃 [ந ஹி திரஸ்க்ருத:] - மறைக்கப்படுவதில்லையே. 𑌶𑍍𑌰𑌵𑌃 [ச்ரவ:] - காதை, 𑌸𑍍𑌥𑌿𑌰𑌂 [ஸ்திரம்] - கெட்டியாக, 𑌸𑍍𑌥𑌗𑌯𑌤𑍁 [ஸ்தகயது] - பொத்திக்கொள்ளட்டும். (அதனால்) 𑌪𑌰𑌭𑍃𑌤𑌃 [பரப்ருத:] - குயில், 𑌧𑍍𑌵𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿 𑌕𑌿𑌮𑍁 [த்வாங்க்ஷதி கிமு] - காக்கையின் சப்தம்போன்ற சப்தமுள்ளதாய்விடுமோ, 𑌸𑍍𑌵𑌯𑌂 [ஸ்வயம்] - தான், 𑌭𑍍𑌰𑌮𑌤𑍁 [ப்ரமது] - தன் புத்தியின் ப்ரமத்தால் மண்டை சுற்றட்டும், (அதனால்) 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌃 [க்ஷிதி:] - பூமி, 𑌨 𑌖𑌲𑍁 𑌬𑌂𑌭𑍍𑌰𑌮𑍀𑌤𑌿 [ந கலு பம்ப்ரமீதி] - சுற்றிச் சுழல்வதில்லையே. 𑌮𑍁𑌷𑍍𑌟𑌿𑌭𑌿𑌃 [முஷ்டிபி:] - முஷ்டிகளால், 𑌨𑌭𑌃 [நப:] ஆகாசத்தை, 𑌕𑌦𑌰𑍍𑌥𑌯𑌤𑍁 [கதர்த்தயது] - குத்தட்டும், (அதனால்) 𑌨𑌭𑌃 [நப:] - ஆகாசம், 𑌕𑍍𑌷𑍁𑌭𑍍𑌯𑌤𑍇 𑌕𑌿𑌂 [க்ஷுப்யதே கிம்] - கலக்கமடையுமா ?

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:- 'ராமாநுஜதிவாகரர்' 'த்ரய்யந்தஸூர்ய:' என்பர். மோக்ஷஸங்கல்பம் என்னும் ஸுதர்சனத்தையும், ஸூர்யோதயத்தையும் கொணரக்கூடியது இத்தர்

சனம். ஸூரியனைப் பழிக்கும் 'ப்ரதிஸூர்யகரை(ஒளுன்களை)ப் போன்றவர். இத்தர்சனத்தைப்பழிப்பவர்' என்றது ஸூர்யோதயம். இந்த ச்லோகமும் ஸூர்யோதயத்தில் இரண்டாம் அங்கத்தில் எம்பெருமானர்சிஷ்யரென்னும் பாத்ரமாக ஸ்வாமியாலேயே ஸாதிக்கப்பட்டது. பழிப்பவர் அஸூயையால்இத்தர்சனத்தைப் பாரோமென்று கண்ணை மூடிக்கொள்ளட்டும். அதனால் ஸூர்யன்போல் திகந்தப்ரகாசமுள்ள இத்தர்சனத்திற்கு என்னகுறை? வாதத்தால் ஜயிக்கமுடியாவிடினும், அஸூயையால் இதைப்பாரோம் என்று கண்ணை மூடிக்கொள்ளலாம். நரி கண்ணை மூடிக்கொண்டால் உலகம் அஸ்தமியாது. குயில் கூவுகையில் காதைக் கெட்டியாகப் பொத்திக்கொள்ளட்டும்; அதனால் குயிலின் ஸ்வரம் காகக் கத்தல் ஆகுமோ? பெருமாள் விஷயமல்லாத பாட்டு 'காகவாசிதம்' (காக்கைக் கற்றல்) என்றார் சுகர். ஆழ்வார்களான குயில்களை இங்கே நினைக்கவேண்டும். நம் ப்ரமத்தினுல் மட்டும் உலகம் ஒன்றிருப்பதாகப் பொய்த்தோற்றம் ஏற்படுவதாயும், உலகத்திலுள்ள ஜீவராசிகள் சுற்றிச் சுழல்வதெல்லாம் நம் புத்தியின் ப்ரமணத்தால் தோற்றம் மட்டுமே என்றும் நினைப்பர். 'காற்று சுற்றிச் சுழல்வதும், ஆகாயத்தில் கோடிக்கணக்கான நக்ஷத்ரகணங்கள் அதிவேகமாய்ச் சுற்றுவது முதலியதெல்லாம் பரப்ரஹ்மத்தின் லீலைகளின் அலைகளின் சக்ரம்' என்று ஜடஸரத்தின் முடிவிலும், ஸூர்யோதயமுடிவிலும் ஸாதித்தார். பரப்ரஹ்மத்தின் அஜ்ஞானத்தால் சுழல்வதன்று, நம் புத்தி சுழற்றலால் சுழல்வதுபோலத் தோற்றமே என்கிருர்கள். ஓர் ஆண்டி சுற்ற உலகமெல்லாம் சுற்றுவதுபோல அவன் ப்ரமிப்பதேயாகும். எம்பெருமானர் தர்சனம் ஆகாசம்போல நிர்மலமானது. வாதங்களில் கைகளைக் காட்டிக்கொண்டு உள்ளங்கையை மடக்கி முஷ்டிகளால் குத்துவதுபோல் ஆகாயத்தைக் குத்திக்கொண்டு ஆகாயத்தில் இறைச்சல் போடுவார். (24)

இரண்டாவது த்ருப்தபத்ததி முற்றிற்று.

## மூன்ருவது கலபத்ததி.

परचिन्तैकनिरताः पुत्रादिष्वप्यसङ्गिनः ।
योगिनामनुकुर्वन्ति विशृङ्खलधियः खलाः ॥ ௨௫ ॥

பரசிந்தைகநிரதா: புத்ராதிஷ்வப்யஸங்கிந: ।
யோகிநுமநுகுர்வந்தி விச்ருங்கலதிய: கலா: ॥ (25)

(ப-ரை) परचिन्तैकनिरताः [பரசிந்தைகநிரதா:] - பிறரைப் பற்றியே பரமாத்மாவைப் பற்றியே, (அவரைத் தூஷிப்பதற்காக, த்யானிக்க) நினைத்தும், விசாரித்தும், पुत्रादिष्वपि [புத்ராதிஷ்வபி]- பெற்ற பிள்ளைமுதலியவரிடமும், असङ्गिनः [அஸங்கிந:] - பற்றில்லாமலும், विशृङ्खलधियः [விச்ருங்கலதிய:] - கட்டிலடங்காமல் தோன்றியபடி ஸஞ்சரிக்கும் புத்தியை உடையவருமான, खलाः [கலா:] - பொல்லாதவர், योगिनाम् [யோகிநும்] - யோகிகளை, अनुकुर्वन्ति [அநுகுர்வந்தி] - அநுஸரிப்பவர்போலும்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— துஷ்டர்கள் சில அம்சங்களால் யோகிகளுக்கு ஒப்பாவார் என்று பரிஹஸிக்கிருர். கலர்கள் தீயோர். அவர்களைப் பற்றியது இப்பத்ததி. 'கலை(ளை)யும் முஸலத்தையும்' சேர்த்து நமஸ்கரித்தார் ஒரு கவி. பரன் என்று ப்ரஹ்மத்திற்கும் பெயர், பிறரையும் சொல்லும். யோகிகள் பரனென்னும் ப்ரஹ்மத்தைச் சிந்திப்பதிலேயே ரதியையுடையவர். துஷ்டர்கள் பிறரைத் தூஷிப்பதற்காக அவர்களைப்பற்றி ஓயாமல் சிந்திப்பர். யோகிகள் புத்ரர்முதலியவரிடமும் ஸங்கத்தை விட்டுவிடுவர். துர்ஜனர் பிள்ளைகளிடம் ப்ரியம் வைக்கமாட்டார்; க்ருபணராகப் பிள்ளைகளுக்குக்கூட ஸௌக்யங்களைச் செய்யமாட்டார். யோகிகள்புத்தி, த்யானத்தின் வலுவினுல் கட்டுத்தடங்கலில்லாமல் ஸர்வ தேசங்களையும் ஸர்வ காலங்களையும் அதிஸூக்ஷ்மங்களையும் ஸாக்ஷாத்கரிக்கும். துஷ்டரின் புத்தியும் கட்டிலடங்காமல் கண்டபடி ஓடித்திரியும். இங்கே துஷ்டர்களைத் துதி செய்கிற பாவனையாக நிந்தை செய்கிருர். (25)

[illegible] ।
अतिवृद्धतपोकानां न समः केनचित् क्वचित् ॥ ௨௬ ॥

ஆத்மார்த்தம் யுக்தவித்தாநும் மித்ரமண்டலபேதிநும் ।
அதிலங்கிதலோகாநும் ந பந்த: கேநசித் க்வசித் ॥ (26)

(ப-ரை) ஆத்மார்த்தம் [ஆத்மார்த்தம்] - தனக்கென்றே (பரமாத்மாவை ஆராதிக்கவே), யுக்தவித்தாநாம் [யுக்தவித்தாநும்] - உபயோகப்படுத்தப்பட்ட த்ரவ்யத்தை உடையவரும், மித்ரமண்டலபேதிநாம் [மித்ரமண்டலபேதிநும்] - மித்ரர்களைக் கலஹப்படுத்திப்பிரிப்பவரும், (ஸூர்யமண்டலத்தைப்பிளந்து கொண்டு,) அதிலங்கிதலோகாநாம் [அதிலங்கிதலோகாநும்] - உலகமர்யாதையை மீறினவர்களுமானவருக்கு, (ப்ராக்ருதமான எல்லா லோகங்களையும் தாண்டினவருக்கு), கேநசித் [கேநசித்] - ஒருவராலும், க்வசித் [க்வசித்] - ஒரு விஷயத்திலும், (ஓர் இடத்திலும்), பந்தோ ந [பந்தோ ந] - பந்தம் (கட்டு) கிடையாது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— 'ஆத்மா, ராஜ்யம், தனங்கள் முதலியவையெல்லாம் பகவானுக்கே' என்று முமுக்ஷுக்களான ஸாத்விகர் பார்ப்பர். தனக்குப் பகவான் அனுக்ரஹித்த பொருளையெல்லாம் தனக்கே உபயோகப்படுத்துபவர் விவேகமில்லாதவர். 'ஆத்மகாரணாத்'—தனக்கென்று யவன் பாகம் செய்கிறானோ அவன் பாபத்தையே உண்ணுகிறான் என்று கீதை. அங்கே 'ஆத்மகாரணாத்' என்றதுபோல, 'ஆத்மார்த்தம்' என்கிறார். 'ஆத்மா' என்பது 'பரமாத்மாவை'யும் சொல்லுகிறது. "மித்ரமண்டலம்" என்பது ஸூர்யமண்டலத்தையும் மித்ரர்கள் ஸமூஹத்தையும் சொல்லும். 'பேதிநும்' என்பது பிளப்பதையும், உட்கலஹம் செய்து பிரிப்பதையும் சொல்லும். மோக்ஷமடையும் ஸாத்விகர் 'சண்டமண்டலத்தினூடு சென்று' என்றபடி எதிர்கதிரோன் மண்டலத்தை ஊடுபாய்பவர், ப்ராக்ருதலோகங்களை எல்லாம் தாண்டி, ஸர்வபந்தங்களிலிருந்தும் விமுக்தராவார். துஷ்டர்கள் உலகவரம்புகளையெல்லாம் அதிலங்கனம் செய்து தீமை செய்வர். அவர்களும் ஒருவருக்கும் ஒரு விஷயத்திலும் கட்டுப்படமாட்டார். (26)

ஸ்நேஹ: சைத்யம் ப்ரஸாதச்ச கோசத்யாகச்ச ஜாயதே ।
ஆஸந்நபரபீடார்த்தம் நிஸ்த்ரிம்சஸ்யாஸிதாத்மந: ॥ ௨௭ ॥



ஸ்நேஹ: சைத்யம் ப்ரஸாதச்ச கோசத்யாகச்ச ஜாயதே ।
ஆஸந்ந பரபீடார்த்தம் நிஸ்த்ரிம்சஸ்யாஸிதாத்மந: ॥ (27)

(ப-ரை) ஆஸந்நபரபீடார்த்தம் [ஆஸந்நபரபீடார்த்தம்]- நெருங்கியிருப்பவரை ஹிம்ஸிக்கப்போகுவதற்கு சற்றுமுன், அஸிதாத்மந: [அஸிதாத்மந:] - கறுப்பான, கெட்ட ஸ்வபாவமுடைய, நிஸ்த்ரிம்சஸ்ய [நிஸ்த்ரிம்சஸ்ய] - கத்திக்கு, தயையற்றவருக்கு, ஸ்நேஹ: [ஸ்நேஹ:] - தைலப்பூச்சும், ஸ்நேஹம் பாராட்டுதலும், சைத்யம் [சைத்யம்] - ஈரமும், குளிர்ச்சி பாவனையும், ப்ரஸாதச்ச [ப்ரஸாத:ச] - பளபளப்பும், அநுக்ரஹபாவனையும், கோசத்யாகச்ச [கோசத்யாக: ச] - உறையை விட்டு வெளிவருதலும், பணத்தை வழங்குவதும், ஜாயதே [ஜாயதே] - உண்டாகிறது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— 'நிஸ்த்ரிம்ச' என்னும் சப்தம் 'நிர்தயரையும் கத்தியையும்' சொல்லும். இவ்விரண்டிற்கும் ஸம்ஸ்க்ருதபாஷையில் ஒரே பெயரை வைத்தது மிக அழகு. 'ஆஸந்நபரபீடார்த்தம்' என்றவிடத்தில் 'ஆஸந்ந' என்பது நெருங்கியிருப்பவரைச் சொல்லும்; பிறரை ஹிம்ஸிப்பதற்கு ஸமீபமாய் சற்றுமுன்பே என்றும் பொருள் கொடுக்கும். பக்கத்திலிருப்பவரைத்தான் துஷ்டர் ஹிம்ஸிப்பார், அவரைத்தான் கத்தி ஹிம்ஸிக்கும். ஹிம்ஸிக்க உறுதி செய்துவிட்டு அதற்கு சற்றுமுன்பு மிக்க ஸ்நேஹம் பாராட்டுவர்; வெகு குளிர்ச்சியாய்ப் பேசுவர், ரொம்பவும் ப்ரஸந்நமாக ஸுமுகமாக இருப்பர், பொருளையும் அவர்களுக்கு வழங்குவார், அடுத்துக் கெடுப்பார். கத்திக்கும் பிறரை ஹிம்ஸிக்கப்போவதற்கு முன் இந்த ஸ்வபாவமெல்லாமுண்டு. ஸ்நேஹத்தை (எண்ணையை)த் தடவியிட்டப்படும், ஈரமாக்கப்படும், அழுக்கெடுத்துப் பளபளவென்றாக்கப்படும், உறையை விட்டு வெளியே வரும். 'கோசம்' என்று கத்தியின் உறைக்கும், பொக்கிஷத்திற்கும் பெயர். நம்பிக்கையை உண்டாக்கிக் கழுத்தை அறுப்பர். (27)

ஜநித்வாபி மஹாகோத்ரே நிம்நகா வக்ரசேஷ்டிதா: ।
வைபரீத்யம் விதந்வந்தி ஸமேஷு விஷமேஷு ச ॥ ௨௮ ॥

ஜநித்வாபி மஹாகோத்ரே நிம்நகா வக்ரசேஷ்டிதா: ।
வைபரீத்யம் விதந்வந்தி ஸமேஷு விஷமேஷு ச ॥ (28)

(ப-ரை) ஊஹாமொஜ்ரே [மஹாகோத்ரே] - பெரிய மலையில், உயர்ந்த வம்சத்தில், ஜநிக்வாவி [ஜநித்வாபி]-உத்பத்தியாகியும், பிறந்தும், வக்ரசெஷிதாஃ [வக்ரசேஷ்டிதா:]-வக்ரமான செயல்களையுடைய, நிம்நஹாஃ [நிம்நகா:]-நதிகள், தாழ்ந்த வழிகளில் நடப்பவர், ஸமெஷேஷு [ஸமேஷு] - ஸமமான பூமிகளிலும், நேர்புத்தியுடையவரிடமும், விஷமெஷேஷு வ [விஷமேஷு ச]-ஸமமில்லாத பூமிகளிலும், கோணல்புத்தியுடையவரிடமும், வைவரீத்யம் [வைபரீத்யம்] - அததற்கு நேர் விபரீதமான தன்மையை, விதயஹி [விதந்வந்தி] - விஸ்தாரப் படுத்துகிறார்கள்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— நதிகளுக்கும் தாழ்ந்த நடத்தையுள்ளவருக்கும் ஸாம்யம். நதிகளும் பள்ளத் (தாழ்ந்த விடத்) தில் ஓடும்; இவர்களும் தாழவே செல்லுபவர். கோத்ரம் என்பது பர்வதத்திற்கும் வம்சத்திற்கும் பெயர். மஹாநதிகள் பெரிய பர்வதங்களில் உத்பத்தியாகும். மஹாவம்சத்தில் பிறந்தவராயினும் நடத்தை தாழ்மையானால் அவர்கள் துர்ஜனரே. நதிகளின் வெள்ளங்கள் எப்படி கோணுமாணுவாக வக்ரமாக ஓடிச் சேஷ்டைகள் செய்யுமோ, அப்படியே இவர்களும். நதிவெள்ளம் ஸமமான பூமிகளைப் பள்ளமும் மேடுமாக்கும். மேடுகளைச் சமமாயும் பள்ளமாயும் செய்யும். தாழ்ந்த நடவடிக்கையுள்ளவர், ஆர்ஜவமுள்ள ஸாதுக்கள் விஷயத்தில் விஷமமாயும், பொல்லாத விஷமரிடத்தில் உண்மையாயும் நடப்பர். இவர்கள் நடத்தை நேர் விபரீதமாயிருக்கும். (28)

உத்பதா துர்நதாஃ கெவிச் வஹுஹங்க ப்ரமாவிலாஃ ।
தடஸ்தாநவி நிக்நந்தி தரஸா பிந்நஸெதவஃ ॥ ௨௯ ॥

உத்பதா துர்நதா: கேசித் பஹுபங்கப்ரமாவிலா: ।
தடஸ்தாநபி நிக்நந்தி தரஸா பிந்நஸேதவ: ॥ (29)

(ப-ரை) உத்பதாஃ [உத்பதா:] - மார்க்கத்தை மீறிநடப்பவரும் (மார்க்கம் தப்பி ஓடுவதும்), வஹுஹங்கப்ரமாவிலாஃ [பஹுபங்கப்ரமாவிலா:] - அநேகம் பரிபவங்கள், ப்ராந்திகளோடு கூடிக் கலக்கமுடையவரும் (அனேக அலைகள் சுழல்களோடு கூடிக் கலக்கமுடையதும்), தரஸா [தரஸா] - வேகத்தினால், பிந்நஸெதவஃ [பிந்நஸேதவ:] - மீறப்பட்ட உலக மர்யாதைகளையுடையவரும் (உடைக்கப்பட்ட கரைகளையுடையதும்) ஆன, துர்நதாஃ [துர்நதா:] - இறைச்சல் போடும் கொடிய துஷ்டர்கள் (பெரிய பொல்லாத ஆறுகள்), தடஸ்தாநவி [தடஸ்தாநபி] - தம் ஜோலிக்கு வராமல் நிற்பவரையும் (தம் கரைகளிலிருக்கும் மரங்களையும்), நிக்நந்தி [நிக்நந்தி] - நாசம் செய்கிறார்கள்.



அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்- அதிகவெள்ளங்களால் தமக்கு ஏற்பட்ட கரைகளை உடைத்து, அலைகளோடும் சுழல்களோடும் மார்க்கம் தப்பிக் கண்டவிடங்களிலோடி சப்தித்துக் கொண்டு, தங்கள் கரைகளிலேயிருக்கும் மரங்களை வேரறுத்து நாசம் செய்யும் பொல்லாத பெரும் ஆறுகளோடு உபமானம். ‘தடஸ்த’ என்பது கரையிலுள்ளதையும், நம் விஷயத்தில் ப்ரவேசிக்கக் கூடாமல் சும்மா இருப்பவரையும் சொல்லும். கோப வேகத்தில் பக்கத்தில் இருப்பவர் யாவராயினும், அவர்களையும் ஹிம்ஸிப்பர். வாதத்தில் இறைச்சல் போடும் துர்வாதி அநேகம் நிக்ரஹஸ்தானங்களையும், ப்ராந்திகளையும் அடைந்தும், கோபஸம்ரம்பத்தால் கையாட்டங்களால் பக்கத்திலுள்ள மத்யஸ்தர்களையும் ஹிம்ஸிப்பார்கள். ‘பங்கம்’ என்பது ஒன்றையொன்று மறுதளிக்கும் பரஸ்பரவிருத்தமான ஏழு முறைகளைச் சொல்லும். ஸப்தபங்கிவாதத்தையும் ஸூசிக்கும். தன் பேச்சையே தான் மாற்றிப்பேசுவது நிக்ரஹஸ்தானம் என்னும் பங்கம் (பராஜயம்) ஆகுமென்பதை அவர்கள் அறியவில்லையே என்று ஸூசனம். அவர்கள் ‘ஒருமுறையில் கட்டுப்படாமல் ஏழு முறைகளுமிருக்கலாம் என்கிறோம், எங்களை யார் ஜயிக்கமுடியும்’ என்று நினைக்கிறார்கள். ஒன்றுக்கொன்று விரோதமாகப் பல முறைகளையும் ஒப்புவது வாதத்தில் பங்கம் (தோல்வி) என்பதை அறியவில்லையே என்பது ரஸம். வாதத்தில் மத்யஸ்தராக ஏற்படுத்தப் பட்டவருக்கு முற்றிலும் கட்டுப்படவேணும் என்று நிர்ப்பந்தம். மத்யஸ்தர்களையே தள்ளிவிடுகிறார்கள். தடஸ்தர் என்று மத்யஸ்தரையும் சொல்லும். (29)

கெநவிஹாலகூடெந கூஷமொத்விஷேஷிநா ।
ஊஷிந வஹுயா ஷிஹம் ஶதஜும் ஊந்யெ ஜநஃ ॥ ௩௦ ॥

கேநசித் தாந்தக்ருத்யேந குலகோத்ரவிமர்திநா ।
மதேந பஹுதா பிந்நம் மாதங்கம் மந்யதே ஜந: ॥ (30)

(ப-ரை) 𑌕𑍁𑌲𑌗𑍋𑌤𑍍𑌰𑌵𑌿𑌮𑌰𑍍𑌦𑌿𑌨𑌾 [குலகோத்ரவிமர்தினா]- குலத்தையும் கோத்ருஷிகளையும் அவமானப்படுத்துவதான (குலபர்வதங்களை முட்டியுடைப்பதான), 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 [கேநசித்]- ஒரு, 𑌦𑌾𑌨𑍍𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑍇𑌨 [தாந்தக்ருத்யேந] - தண்டிக்கத்தக்க கெட்ட செய்கையால் (தந்தங்களின் முரட்டு வ்யாபாரத்தால்), 𑌮𑌦𑍇𑌨 [மதேந] - மதத்தினுல் (மதஜலத்தால்), 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 [பஹுதா பிந்நம்] - பல வழிகளில் வரம்பை மீறின வனை (தாரைதாரையாய் உடம்பில் மதஜலப்பெருக்கையுடையதை), 𑌜𑌨𑌃 [ஜந:] - உலகத்தார், 𑌮𑌾𑌤𑌙𑍍𑌗𑌂 [மாதங்கம்] - சண்டாளனுக (யானையாக), 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 [மந்யதே] - நினைப்பர்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— போக்கிரியாயிருப்பவன் குலத்தையும், கோத்திரத்தையும் கெடுக்கும் துஷ்டச் செயல்களைச் செய்வான். தண்டித்து அடக்கவேண்டியிருக்கும்படி துஷ்டச் செய்கை செய்வான். குலம் கோத்திரம் இவற்றின் ஆசாரம் மலையைப்போல உடைக்கக்கூடாததாயிருக்கவேண்டும். மலையை உடைத்தாலும் உடைக்கலாம். நற்குலத்தில் நல்ல கோத்திரத்தில் பிறந்தவருடைய நல்லொழுக்கம் மலையினும் கெட்டியாயிருக்கவேணும். அந்தக் குலத்தில் ஓர் மதயானை பிறந்தால், அதை முட்டி உடைக்கும். யானைகள் மலைக்காடுகளில் பிறக்கும். தாம் பிறந்து வளரும் மலையையே தம் தந்தங்களால் வேறு யாதொரு ப்ரயோஜனமும் இல்லாமலே கொம்பினுல் முட்டியுடைக்கும். சிலர் நற்குலத்தில் பிறந்தும், குடி முதலிய துஷ்ட ஆசாரங்களில் இறங்கிப் பலவிதமாக வரம்புகளை மீறி நடப்பார். யானை மத்யத்தைக் குடிப்பதில்லை; அதற்கு மதம் இயற்கையாகச் சில காலங்களில் பிடித்து மதஜலம் வெளியே தாரைதாரையாக உடம்பில் பெருகி வாலிக்கும். துஷ்டர் மத்யத்தை உள்ளேதாங்களாகப்பானம் செய்து, உள்ளே போன மதம் வெளியில் துர்வாஸனையாயும் துஷ்டச் செய்கைகளாகவும் பெருகும். 'மாதங்கம்' என்பது யானைக்கும் சண்டாளருக்கும் பெயர். இவர்கள் கர்மசண்டாளர்கள். (30)



𑌅𑌨𑍇𑌕𑌮𑍁𑌖𑌪𑌾𑌪𑌾𑌤𑍍𑌮𑌾 𑌛𑌨𑍍𑌨𑌸𑌂𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌾𑌶𑍍𑌰𑌮𑌃 ।
𑌕𑌰𑍍𑌪𑍂𑌰𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑌾𑌪𑍇𑌯𑌕𑌲𑌹𑍋𑌚𑌿𑌤𑌃 ॥ ௩௧ ॥

அனேகமுக பாபாத்மா சன்னஸந்தர்சிதாச்ரம: ।
கர்புரப்ரக்ருதி: கச்சித் காபேயகலஹோசித: ॥ (31)

(ப-ரை) 𑌅𑌨𑍇𑌕𑌮𑍁𑌖𑌪𑌾𑌪𑌾𑌤𑍍𑌮𑌾 [அனேகமுகபாபாத்மா] - விதம் விதமாக அநேக பாபங்களைச் செய்யும் ஸ்வபாவத்தையுடையவனும் (பத்து முகங்களையுடைய பாபிஷ்டனும்), 𑌛𑌨𑍍𑌨𑌸𑌂𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌾𑌶𑍍𑌰𑌮𑌃 [சன்னஸந்தர்சிதாச்ரம:] - கபடமாக ஸந்யாஸிவேஷம் பூண்டவனும், 𑌕𑌰𑍍𑌪𑍂𑌰𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 [கர்புரப்ரக்ருதி:] - ஆஸுரஸ்வபாவனுமான (ராக்ஷஸப்பிறவியான), 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 [கச்சித்] - ஒருவன் (ராவணன்), 𑌕𑌾𑌪𑍇𑌯𑌕𑌲𑌹𑍋𑌚𑌿𑌤𑌃 [காபேயகலஹோசித:] - சபலபுத்தியால் செய்யும் வீண்கலஹங்களுக்குத் தக்கவன் (வானரங்களோடு சண்டைக்குத் தக்கவன்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஸந்யாஸி வேஷத்தால் மட்டும் யோக்யனென்று நம்பலாகாது. ராவணனை நினைக்கவேணும். வேஷம் போட்டுக்கொண்டு வேஷத்காலே மாற்றி பரஸ்வத்தையும் பரதாரங்களையும் அபஹரிப்பர். ஆஸுரஸ்வபாவமுடையவராக வீண்துர்கக்ஷிகள் செய்வர். குரங்கினும் சபலமான புத்தி இருக்கும். இங்கே 'காபேயகலஹம்' என்று கப்யாஸச்ருதிவிவாதத்தையும் நினைக்கலாம், (31)

𑌛𑌲𑌿𑌨𑌂 𑌸𑌤𑍍𑌕𑌥𑌾𑌨𑌰𑍍𑌹𑌂 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍋𑌪𑌹𑌤𑌜𑌾𑌤𑌿𑌕𑌂 ।
𑌨 𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌯𑌃 𑌕𑌾𑌲𑍇 𑌸𑍋𑌽𑌪𑌿 𑌸𑌭𑍍𑌯𑍈𑌰𑍍𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 ॥

சலினம் ஸத்கதாநர்ஹம் ஸ்வாத்மோபஹதஜாதிகம் ।
ந நிக்ருஹ்ணாதி ய: காலே ஸோऽபி ஸப்யைர்நிக்ருஹ்யதே ॥ (32)

[ப-ரை] 𑌛𑌲𑌿𑌨𑌂 [சலினம்] - (கபடமுடையவனை, (சலமென்னும் துர்வாதம் செய்பவனை,) 𑌸𑌤𑍍𑌕𑌥𑌾𑌨𑌰𑍍𑌹𑌂 [ஸத்கதாநர்ஹம்] - ஸாதுகோஷ்டிக்கு அயோக்யனுன, (ஸரியான வாதத்திற்கு யோக்யமல்லாதவனை), 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍋𑌪𑌹𑌤𑌜𑌾𑌤𑌿𑌕𑌂 [ஸ்வாத்மோபஹதஜாதிகம்] - தன் ஜாதியைத் தானே கெடுப்பவனை, (தன் கக்ஷியைக் கொல்லக்கூடிய ஓர் யுக்தியைத் தனக்கு ஸாதகம்போல வாதத்தில் பேசுபவனை). 𑌯𑌃 [ய:] - எந்த மத்யஸ்

தன், (பார்ப்பவன்) 𑌕𑌾𑌲𑍇 [காலே] - அப்பொழுதப்பொழுதே, 𑌨 𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 [ந நிக்ருஹ்ணாதி]- கண்டிக்கவில்லையோ, 𑌸𑍋𑌽𑌪𑌿 [ஸோऽபி] - அவனும், (அந்த மத்யஸ்தனும்), 𑌸𑌭𑍍𑌯𑍈𑌃 [ஸப்யை:] - ஸபையிலுள்ளவரால், 𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 [நிக்ருஹ்யதே] - கண்டிக்கப்படுவான்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ராவணன் பேச்சு வந்தது. அவனுடைய துஷ்டப்பேச்சைக் கேட்டு ஸீதை இங்கே ஸத்துக்களில்லையோ என்று கேட்டாள். ஸத்துக்கள் துராசாரம் செய்யும் துஷ்டரைக் கண்டிக்கவேணும்; கண்டிக்காவிட்டால் அதைப் பார்த்திருந்தவருக்கும் தோஷம் வரும். விபீஷணர் ராவணனைக் கண்டித்தார். முன் ச்லோகத்தில் யதிவேஷம் பூண்டு துர்க்கக்ஷி செய்பவரின் ப்ரஸ்தாவமும் வந்தது. வாதத்தில் சலம், ஜாதி, நிக்ரஹஸ்தானம் என்பவை உண்டு. ப்ரதிவாதி சொல்லும் ஒரு வார்த்தையைப் பிடித்துக்கொண்டு அவர் நினைக்காத ஓர் அர்த்தத்தை அவர் கொண்டதாக ஆரோபித்து அவர் பேச்சை தூஷிப்பது சலம். அப்படிக் கக்ஷி பேசுவதை மத்யஸ்தர் ஒப்பார். அதை அவர்கள் கண்டிக்கவேணும். ஜாதியென்பது தன் கக்ஷிக்கு நேர்விரோதமான ஓர் யுக்தியை வாதத்தில் பேசுவது. 'நிக்ரஹம்' என்பது வாதத்தில் தோல்விக்கு அடையாளங்கள். வாதத்தில் துர்க்கக்ஷி செய்ய ஆரம்பித்து நிக்ரஹம் வரும் இடங்களில் மத்யஸ்தர் அதை உடனே எடுத்துக்காட்டி நிக்ரஹிக்கவேணும். அப்படிச் செய்யாவிடில் அவரை ஸபையிலுள்ள பெரியோர் நிக்ரஹிப்பார். துராசாரத்தை ஸாதுக்கள் உடனுக்குடன் கண்டிக்காவிட்டால் அவர்களை மற்ற ஸாதுக்கள் வெறுப்பர்.

𑌨𑌿𑌗𑌿𑌰𑌨𑍍𑌤𑍋 𑌜𑌗𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌉𑌦𑍍𑌗𑌿𑌰𑌨𑍍𑌤𑍋 𑌮𑍁𑌖𑍈𑌰𑍍𑌵𑌿𑌷𑌮𑍍 ।
𑌦𑍂𑌰𑌤𑌃 𑌪𑌰𑌿𑌹𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 𑌜𑌿𑌹𑍍𑌮𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌃 ॥ ॥ ௩௩ ॥

நிகிரந்தோ ஜகத்ப்ராணாந் உத்கிரந்தோ முகைர்விஷம் ।
தூரத: பரிஹர்த்தவ்யா த்விஜிஹ்வா ஜிஹ்மவ்ருத்தய: ॥ (33)

(ப-ரை) 𑌜𑌗𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 [ஜகத்ப்ராணாந்] - உலகத்தின் உயிரை (காற்றை), 𑌨𑌿𑌗𑌿𑌰𑌨𑍍𑌤𑌃 [நிகிரந்த:] - விழுங்கிக் கொண்டு (கொன்றுகொண்டு), 𑌮𑍁𑌖𑍈𑌃 [முகை:]-வாய்களால் (வாக்கினால்), 𑌵𑌿𑌷𑌮𑍍 [விஷம்] - விஷத்தை, 𑌉𑌦𑍍𑌗𑌿𑌰𑌨𑍍𑌤𑌃 [உத்கிரந்த:] - கக்கிக்கொண்டு (இருக்கும்), 𑌜𑌿𑌹𑍍𑌮𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌃 [ஜிஹ்மவ்ருத்



தய:] - கோணல் நடத்தையுடையவர் (கோணலாய் நெளியும்), 𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌃 [த்விஜிஹ்வா:] - இரண்டு நாக்குடைய, முன் பேச்சை யழித்துப் பொய் பேசுபவர் (இரண்டு நாக்குகளையுடைய பாம்புகள்), 𑌦𑍂𑌰𑌤𑌃 [தூரத:] - தூரத்தில், 𑌪𑌰𑌿𑌹𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌃 [பரிஹர்த்தவ்யா:] - விலகியிருந்து பரிஹரிக்கத்தக்கவர்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— முன்பு வாதங்களில் துர்வாதங்களைப் பேசுகிறவரைப்பற்றிப்பேசினார். இங்கே உள்ளே ஒன்று நினைத்துக்கொண்டு சூதாக வெளியில் பொய் பேசுபவரும் கோழ்சொல்லுபவரும், இரண்டு நாக்குடைய பாம்புகளைப்போன்றவர், விஷத்தைக் கக்குபவர்; தாங்கள் கக்கும் விஷத்தால் ஜனங்களின் உயிரையே கொல்லுகிறவர்களென்கிறார். கோணலாக ஸஞ்சரிப்பதும், விஷத்தைக் கக்கி உயிர்களைக் கொல்லுவதும் இருவருக்கும் பொது. பாம்புகள் காற்றடிக்கும்போது வெளியே வந்து காற்றைச் சாப்பிடுமென்பர். நம்முடைய பிராணனும் ஓர் காற்று. (33)

𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌾𑌰𑌿𑌣𑌾𑌂 𑌦𑍀𑌨𑍈𑌰𑌾𑌕𑍍𑌰𑍁𑌷𑍍𑌟𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 ।
𑌅𑌘𑌾𑌯 𑌗𑌤𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 ॥ ॥ ௩௪ ॥

அகிஞ்சித்காரிணாம் தீனைராக்ருஷ்டகுணகர்மணாம் ।
அகாய கதஸத்வாநாம் தர்சனஸ்பர்சனாதிகம் ॥ (34)

(ப-ரை) 𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌾𑌰𑌿𑌣𑌾𑌂 [அகிஞ்சித்காரிணாம்] - ஓர் உபகாரமும் ஒருவருக்கும் செய்யாத(அசைவதற்கு சக்தியற்ற), 𑌦𑍀𑌨𑍈𑌃 [தீனை:] - பேதைஜநங்களால் (துக்கப்பட்டு அழுகிறவர்களால்), 𑌆𑌕𑍍𑌰𑍁𑌷𑍍𑌟𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 [ஆக்ருஷ்டகுணகர்மணாம்] - திட்டிக் கூக்குரல் போடத்தக்க ஸ்வபாவத்தையும் செய்கைகளையுமுடையவரும் (ஒப்பாரி வைத்தழப்படும் குணம், செய்கைகளையுடையவருமான), 𑌗𑌤𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂[கதஸத்வாநாம்]- ஸத்வகுணமில்லாதவருடைய (உயிர்போன சவங்களுடைய), 𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑌿𑌕𑌂 [தர்சனஸ்பர்சனாதிகம்] - கண்ணால் பார்ப்பது, தொடுவது முதலியவை, 𑌅𑌘𑌾𑌯 [அகாய] - பாபத்தையளிக்கும் (தீட்டைக் கொடுக்கும்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— முன் ச்லோகத்தில் 'வலர்' என்னும் துஷ்டரை உயிருள்ள விஷப்பாம்புகளுக்கு ஒப்

பிட்டார். இங்கே அவர்களை உயிரில்லாத ம்ருதசரீரத்துக்கொப் பிடுகிருர். 'ஜீவன் சவ:' என்ருர் ஸ்ரீசுகர் தொண்டரடிப் பொடிகளை சிரஸில் தரியாதவரை. ம்ருதசரீரங்களைப் பார்த்தா லும் தொட்டாலும் தீட்டுண்டு, அசுத்தியுண்டு. 'ஸத்வம்' என் பது ஸத்வகுணத்தையும் உயிரையும் (ப்ராணனையும்) சொல்லும். கதஸ்தவர்கள் உயிரற்ற சரீரங்கள், ஸத்வகுணசூந்யர். 'தீனர்' என்பது அநாதைப்பேதைகளையும், இழவில் அழுகிறவரையும் சொல்லும். உயிர்போன சரீரங்கள் பக்கத்தில் இழவுபட்ட பந் துக்கள் அவர்கள் உயிருடனிருக்கையில் காட்டிய குணங்களையும் செய்த செய்கைகளையும் சொல்லி கூக்குரலிட்டு அழுவர். கொடிய வர்களுயிருடனிருக்கையிலேயே அவர்கள் தீக்குணங்களையும் தீச் செயல்களையும்பற்றி உரக்கத்திட்டுவர். நற்குலத்திற் பிறந்து குடியைக் கெடுப்பவனைக் கர்மசண்டாளரென்ருர். இங்கே தீட் டுண்டென்கிருர். (34)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ॥ ௩௫ ॥

அதிகோந்நதைரபி ஸுதாருணைர்விதை:
அஸக்ருத் ப்ரமத் பசுகணைங்க்ரிபீடிதை; ।
விதிஸித்தனைககுண ஸஸ்ய ஸம்பதாம்
விரஸஸ்வபாவகடினைரலம் கலை: ॥ (35)

(ப-ரை) [illegible] [விதிஸித்தனைககுணஸஸ்யஸம்பதாம்] - தெய்வகிருபையால் பற் பல நற்குணப்பயிர்கள் முளைத்து ஓங்கப்பெற்றவருக்கு (பாக்கி யத்தால் உயர்ந்த குணங்களும் தனதான்யஸம்பத்துமமைந்த வருக்கு) (யாகங்கள் செய்ய சாஸ்திரவிதிப்படிக்கு வேண்டிய அதிகாரஸம்பத்தையும் தனதான்யஸம்பத்தையும் பெற்றவ ருக்கு) (பிறவியால் கவிதையென்னும் பயிரோங்கி வளரப்பெற் றவருக்கு), [illegible] [அதிகோந்நதைரபி]-ரொம் பவும் உயர்ந்த ப்ரஸித்தியடைந்திருந்தும் (நல்ல மேட்டு நிலத் திலுள்ளனவும்), [illegible] [ஸுதாருணைர்விதை:]- மிகக் கொடிய ஸ்வபாவத்தோடு கூடியவரும் (நல்ல கட்டுத் தரி யோடு கூடினதும்), [illegible]



189912
சென்னை-600 009.

[அஸக்ருத்ப்ரமத்பசுகணைங்க்ரிபீடிதை:] - அடிக்கடி ப்ரமங்களை யடையும் மிருகம்போன்ற அவிவேகிகளால் கால்பிடிக்கப்பட்ட வரும் (சுற்றிச்சுற்றி வரும் மாடுகளின் குழம்புகளால் மிதிக்கப் பட்டதும்), [illegible] [விரஸஸ்வபாவகடினை:]- ரஸிக்யமேயில்லாததால் கடினஹ்ருதயருமான (ஈரமில்லாத தால் கெட்டியாயிருப்பதுமான), [illegible] [கலை:] - துஷ்டர் களால் (நெற்களங்களால்) (கருப்பு ஆலைகளால், செக்கு யந்த்ரங் களால்), [illegible] [அலம்] - போதும் (பூர்ணம்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— 'கலர்' என்று துஷ்ட ஸ்வபாவருக்கும் நெற்களத்திற்கும், ஆலை முதலிய யந்திரத்திற் கும் பெயர். களங்கள் மேடாயிருக்கும்; மாடுகள் சுற்றிச்சுற்றி வந்து மிதித்துக்கொண்டு மேலும் மேலும் கெட்டிப்படும். களங் களில் கட்டு முளையிருக்கும். அந்தக் கட்டு முளையையே யாகத் திற்கு 'யூபமாக' கட்டுமரமாக வைத்துக்கொள்ளுவதுண்டு. யாக பசுக்கள் அதில் நடந்துகொண்டிருக்கும். ஆலைமாடுகளும் செக்கு மாடுகளும் சுற்றிச்சுற்றிவரும். கரும்புகளோ எளளோ அரைக் கப்படுவதில் விழும் கரும்பு ரஸமும் எண்ணெயின் ரஸமும் செக் குக்கும் தரைக்கும் சுவைக்காது. பாக்யவசத்தால் நெல்லு, கரும்பு, எள்ளு முதலிய ஸம்பத்துப்பெற்றவர்களுக்கு இந்தக் களங்களும், ஆலை செக்கு முதலியனவும் வேண்டியமே, யதேஷ்ட மாகவேனும், அவர்களுககுத்தான் இவை வேண்டும். 'வலர்' என்னும களங்கள் உபயோகமானவையேயொழிய 'கலர்'என்னும் போக்கிரிகள் உலகத்திற்கே வேண்டாம். சிலர் உயர்ந்த பீடத் திலிருந்து ப்ரஸித்திபெற்றிருப்பர். ஆனால் கொடிய ஸ்வபாவ மும் கலந்திருக்கும்.ஸ்வயமாக அதிக அக்ஞானம்,ப்ரமம் இவற்றை யுடைய அவிவேகிகள் அவர்கள் காலில் விழுந்து 'எங்கள் ஆத்மா வைக் காப்பாற்றவேண்டும்' என்று கெஞ்சுவார்கள். அவ்வாசிரி யர் ரஸிகரல்லாத கடின ஹ்ருதயராயிருப்பர். பிறவியாலேயே நற்குணமும் நல்ல ஸம்பததும் பெற்றவர்களுக்கு இவ்வாசிரியர்கள் வேண்டாம். நல்ல கவிதாசக்தி பெற்றவருக்கு காவிஷ்டரும் அர ஸிகரும் கடினஹ்ருதயருமான துர்ஜனர் வேண்டாம். நல்ல தன தானயஸம்பத்தும் சாஸ்திரீயமான யாகாதிகாரஸம்பத்தும் பெற் றவருக்கு பசுகணங்களைக்கொண்டு யாகங்கள் செய்ய ஸௌகர்ய மான கட்டுமரத்தோடு கூடிய களங்கள் வேண்டும். 'அலம்' என் பதற்கு 'வேண்டாம்' என்றும் 'ஸம்ருத்தம்' என்றும் இரண்டு பொருளும் உண்டு. (35)

[illegible]

𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌹𑌾𑌰𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑌾 𑌅𑌪𑌿 𑌨 𑌤𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑍈 𑌦𑌿𑌶𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌂
𑌬𑌨𑍍𑌧𑍇 𑌗𑌾𑌢𑌵𑌿𑌮𑌰𑍍𑌦𑌨𑍇𑌽𑌪𑌿 𑌨 𑌜𑌹𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌸𑌂𑌪𑍀𑌡𑌨𑌂।
𑌉𑌷𑍍𑌣𑍇 𑌶𑍀𑌤𑌲𑌤𑌾𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯 𑌶𑌿𑌶𑌿𑌰𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌭𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑍁𑌷𑍍𑌣𑌤𑌾𑌂
𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑌚𑍇𑌟𑌿𑌕𑌾𑌕𑍁𑌚𑌤𑌟𑍀𑌕𑌾𑌠𑌿𑌨𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑌃 𑌖𑌲𑌾𑌃 ॥

முக்தாஹாரநிஷேவிதா அபி ந தத்வ்ருத்த்யை திசந்த்யந்தரம்
பந்தே காடவிமர்தநேऽபி நஜஹத்யந்யோந்யஸம்பீடனம் l
உஷ்ணே சீதளதாமுபேத்ய சிசிரே ப்ராப்தே பஜந்த்யுஷ்ணதாம்
காமாந்த:புரசேடிகாகுசதட காடிந்யவந்த: கலா: ll (36)

(ப-ரை) 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑌚𑍇𑌟𑌿𑌕𑌾 𑌕𑍁𑌚𑌤𑌟𑍀 𑌕𑌾𑌠𑌿𑌨𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑌃 [காமாந்த:புரசேடிகா குசதட காடிந்யவந்த:] - மந்மதனுடைய அந்தப்புரத்திலுள்ள பெண்களின் தனங்களைப்போல மிகக் கடினரான, 𑌖𑌲𑌾𑌃 [கலா:] - துர்ஜநர்கள், 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌹𑌾𑌰𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑌾 𑌅𑌪𑌿 [முக்தாஹாரநிஷேவிதா அபி] - வயிற்றுச் சோற்றுக்கு வழியில்லாமல் பட்டினி கிடப்பவரால் வருந்தி ஸேவிக்கப்பட்டாலும் (முத்துஹாரங்களால் அலங்கரிக்கப்பட்டாலும்), 𑌤𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑍈 [தத்வ்ருத்த்யை] - அவர்கள் ஜீவனத்திற்கு (அவை இருக்க), 𑌅𑌨𑍍𑌤𑌰𑌂 [அந்தரம்] - இடத்தை, 𑌨 𑌦𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 [ந திசந்தி] - கொடுக்கமாட்டார், 𑌬𑌨𑍍𑌧𑍇 [பந்தே] - சிறையிலடைத்து (ரவிக்கையில், கட்டியணைத்தலில்), 𑌗𑌾𑌢𑌵𑌿𑌮𑌰𑍍𑌦𑌨𑍇𑌽𑌪𑌿 [காடவிமர்தனேபி] - அதிகமாக அடித்து அடக்கினாலும் (இறுகக்கட்டினாலும், கெட்டியாய்க் கட்டினாலும்), 𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌸𑌂𑌪𑍀𑌡𑌨𑌂 [அந்யோந்யஸம்பீடனம்] - ஒருவரை ஒருவர் உபத்ரவிப்பதை (ஒன்றுக்கொன்று இடைவெளியில்லாமல் நெருக்கிக்கொள்ளுவதை, ஒன்றையொன்று நெருக்கிவருத்துவதை), 𑌨 𑌜𑌹𑌤𑌿 (ந ஜஹதி) - விடுகிறதில்லை, 𑌉𑌷𑍍𑌣𑍇 [உஷ்ணே] - கோபித்து மிரட்டும்போது (வெயிற்காலத்தில்), 𑌶𑍀𑌤𑌲𑌤𑌾𑌂 [சீதளதாம்] - தணிவையும், அமைதியையும் (குளிர்ச்சியையும்), 𑌉𑌪𑍇𑌤𑍍𑌯 [உபேத்ய]-அடைந்து, 𑌶𑌿𑌶𑌿𑌰𑍇 [சிசிரே] - தயவு செய்கையில் (குளிர்காலத்தில்), 𑌉𑌷𑍍𑌣𑌤𑌾𑌂 [உஷ்ணதாம்] - கொடுமையையும் (சூட்டையும்), 𑌭𑌜𑌨𑍍𑌤𑌿 [பஜந்தி] - அடைவர்.



அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— சிரிக்கச் சிரிக்க வேடிக்கையாக வர்ணிக்கிறார். கலமென்னும் துர்ஜனருக்கொப்பான களங்கள் கெட்டித் தரையாய் உந்நதமாயிருக்கும் என்றார். களங்களில் பசுக்கள் மேலே சுற்றிச் சுழன்று வந்து தான்யத்தையும் களத்தையும் மர்த்தனம் செய்யும் என்றார். இங்கே சில சமத்காரங்களால் கலர்களைப் பெண்களின் மலைபோல் உந்நதமும் கடினமுமான தனங்களுக்கு ஒப்பிடுகிறார். பெண்களின் தனங்களைப்பற்றிப் பேசுவது ஸ்வபாவோக்தி. துர்ஜனரான யஜமான்கள் வேலைக்காரருக்கு முழுவயிற்றுக்குச் சோறு போடமாட்டார். ஸ்வாமிகாலத்திலேயே யஜமானருக்கும் வேலைக்காரர்களுக்கும் இந்நாளில்போல சம்பளம் போதாது என்று சண்டையிருந்தது. பட்டினி கிடந்து சாகிறேன் என்றாலும், இரங்கமாட்டார். துர்ஜனரைக் கட்டிச் சிறையில் அடைத்து வைத்தாலும், சிறைச்சாலைக்குள்ளும் ஒருவரை ஒருவர் ஹிம்ஸித்துப் பெருங் கலஹங்களை உண்டாக்குவர். விஞ்சினால் கெஞ்சுவர், கெஞ்சினால் விஞ்சுவர். ஸமுத்ரராஜனைப்போல். அவரும் பெருமாள் பட்டினி கிடந்ததையும் கவனியாமல் அவருக்கு வழிவிடவில்லை. இந்தக் கதையையும் ஸ்வாமி இங்கே நினைக்கிறார். ‘பந்தே’ ஸேதுபந்தத்திலும், கெட்டியாக அணை போடுகையிலும் அலைகள் ஒன்றை ஒன்று மோதும். பட்டினி கிடக்கும் பெரியோர் களத்திற்கு நெற்பிச்சைக்கு வந்தாலும், துர்ஜனராயிருப்பவர் அவர்களுக்கு ஜீவனத்திற்கு நெல் பிச்சை போடுவதில்லை என்பதையும், முதலடியில் முன் ச்லோகத்தின் களப்ரஸ்தாவத்தின் தொடர்ச்சியாக நினைக்கலாம். பெண்கள் தனத்தடங்களில் முத்துஹாரங்கள் சுழலும். அந்த ஹாரங்கள் அங்கேயே கிடந்து புரண்டாலும் இரண்டு தனங்களுக்கு நடுவில் துளி தங்க இடம் கிடைக்காது. சந்து அகப்படாது. கஞ்சுகங்களாலோ, நாயகனாலோ கெட்டியாய்க் கட்டப்பட்டாலும், ஒன்றை யொன்று இறுத்தும். உஷ்ணகாலத்தில் சீதஸ்பர்சமாயும், குளிர்காலத்தில் உஷ்ணஸ்பர்சமாயுமிருக்கும். மன்மதனுடைய அந்தப்புரத்திலுள்ள ஸுந்தரிகளின் தனதடமிப்படி யிருக்குமென்கிறார். (36)

மூன்றாவது கலபத்ததி முற்றிற்று.

# நான்காவது துர்வ்ருத்த பத்ததி.

ஶுணஜாலப்ரகர்ஷேऽபி தீவரத்வேऽபி ஜந்மத: ।
ஸர்வதீர்த்தாவகாஹேऽபி நீசவ்ருத்திர் ந ஶஸ்யதே ॥ ௩௭ ॥

குணஜாலப்ரகர்ஷேऽபி தீவரத்வேऽபி ஜந்மத: ।
ஸர்வதீர்த்தாவகாஹேऽபி நீசவ்ருத்திர் ந சஸ்யதே ॥ (37)

(ப-ரை) ஶுணஜாலப்ரகர்ஷேऽபி [குணஜாலப்ரகர்ஷேபி]-(மீன் பிடிக்கும்) கயிறு வலையை இழுத்தாலும் (சிறந்த குணங்களின் கூட்டங்களமைந்து அதனால் மேன்மை பெற்றாலும், சிறந்த குணவாஸனைகளை முன்ஜந்மத்திலிருந்து இழுத்துக்கொண்டு பிறந்தாலும்), ஜந்மத: [ஜந்மத:] - பிறவியால், தீவரத்வேऽபி [தீவரத்வேபி] - உயர்ந்த புத்தியுடையவனாய் இருப்பினும் (செம்படவனாயிருப்பினும்), ஸர்வதீர்த்தாவகாஹேऽபி [ஸர்வதீர்த்தாவகாஹேபி] - எல்லாப் புண்யதீர்த்தங்களிலும் நீராடினாலும், நீசவ்ருத்தி: [நீசவ்ருத்தி:] - நீசமான ஆசாரத்தை ஆசரிப்பவன் (ஹீநமான தொழிலாளியானவன்), ந ஶஸ்யதே [ந சஸ்யதே] - புகழப்பட மாட்டான்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— வேதக்கல்வி, நற்குணங்கள், நற்குலம் இவையெல்லாம் இருப்பினும், துராசாரமாயிருப்பவன் ஸத்தென்று ஸத்துக்களால் புகழ்பெறான். 'ஆசாரஹீநனை ஆறு அங்கங்களோடும் கற்கப்பட்ட நாலு வேதங்களும் பரிசுத்தனாகச் செய்யமாட்டா', "ஓர் ஆயுளில் ஸம்பாதித்த பூர்வ ப்ரஜ்ஞை தேஹத்தை விடுகையில் பின் தொடர்வது' என்று சாஸ்த்ரம் சொன்னாலும், 'ஆசாரஹீனனைக் கற்ற வேதங்கள் இவனுடைய அந்த்யகாலத்தில் விட்டுவிட்டுப் பக்ஷிகளைப்போலப் பறந்துபோய்விடும்", 'தர்மம் ஆசாரத்திலிருந்து உண்டாகும்' என்னும் ப்ரமாணங்களைக் கவனிக்கவேணும். என்ன வேதக்கல்வியும், பிறவி நற்குணங்களுமிருந்தாலும், எத்தனை புண்யதீர்களாடினாலும் துராசாரசீலனாயின், அவனைச் சான்றோர் புகழார். அவனை மீன் பிடிக்கும் தொழிலாளிக்கு ஒப்பிடலாம். அவனும் குணஜாலத்தைத் தண்ணீரில் போட்டு இழுக்கிறான். அவன் குணக்கூட்டங்களின் உயர்த்தியைப் பெற்றிருந்து என்ன பயன்?



'ஜாலம்' என்பது வலையையும் கூட்டத்தையும் சொல்லும். 'ப்ரகர்ஷம்' என்பது இழுப்பதையும், உயர்த்தியையும் சொல்லும். மீன் பிடிப்பவன் மாம்ஸத்தைத் தூண்டியில் துளி வைத்து ஆசை காட்டி, மீன்களைச் சிக்கவைக்கிறான்; இவனுடைய குணக்கூட்டமும் பிறரை ஏமாற்றிச் சிக்கவைக்க வலையாகிறது. 'தீவரன்' என்பது உயர்ந்த புத்தி அமைந்தவனையும், செம்படவனையும் சொல்லும். கீதையில் 15-ல் 'பூர்வகர்மாநுகுணமாக இந்த்ரியாதிகளை இழுக்கிறான்; வாஸனையைக் காற்று இழுத்துச் செல்லுவதுபோல பிறக்கையிலும், இறக்கையிலும் வாஸனையை இழுத்துச் செல்லுகிறான்' என்றும், 'தேஹத்தை விடுபவனைப் பூர்வப்ரக்ஞையும் வித்யையும் கூடச் செல்லுகிறது' என்று ச்ருதியிலும் பேசியதை நினைத்துப் பிறவியிலிருந்தே குணக்கூட்டங்களையும் ப்ரக்ஞையையும் இழுக்கிறான்' என்கிறார். செம்படவன் மீன்களை ஏமாற்றப் புண்யதீர்த்தங்களில் முழுகுவதுபோல், இவர்களும் பிறரை வஞ்சிக்கத்தான் கங்காதி புண்யதீரவாஸஞ்செய்து தீர்த்தஸ்நானம் செய்கிறார்கள். செம்படவன் மீன் நாற்றம் வீசுவதுபோல், இவர்கள் துராசாரதுர்கந்தம் வெகுதூரம் வீசும். 'புண்யகர்மத்தின் வாஸனை நன்றாய்ப் புஷ்பித்த வ்ருக்ஷவாஸனைபோல தூரம்வீசும்' என்றது ச்ருதி. (37)

த்விஜராஜாங்கஸம்ஸ்தோऽபி ஸந்மார்காசாரவாநபி ।
விஶுத்திரஹித: கஶ்சிந் ந விந்தத்யகளங்கதாம் ॥ ௩௮ ॥

த்விஜராஜாங்கஸம்ஸ்த்தோऽபி ஸந்மார்காசாரவாநபி ।
விசுத்திரஹித: கச்சித் ந விந்தத்யகளங்கதாம் ॥ (38)

(ப-ரை) த்விஜராஜாங்கஸம்ஸ்தோऽபி [த்விஜராஜாங்கஸம்ஸ்தோபி]- ப்ராஹ்மணச்ரேஷ்டர்களுடைய ஸமீபத்திலிருந்தாலும் (சந்திரனுடைய மடியிலிருந்தாலும்), ஸந்மார்காசாரவாநபி [ஸந்மார்க்காசாரவாநபி] - நன்மார்க்கத்தை ஆசரித்து வந்தாலும் (நக்ஷத்ரமார்க்கத்தில் ஸஞ்சரிக்கப்பெற்றாலும்), விஶுத்திரஹித:[விசுத்திரஹித:]-நல்ல சுத்தியில்லாத, கஶ்சித் [கச்சித்] - ஒருவன் (ஒன்று), அகளங்கதாம் [அகளங்கதாம்] - களங்கமற்ற தன்மையை (பழிப்புக்கு இடமில்லாமையை), ந விந்ததி [ந விந்ததி] - அடைகிறதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— பெரியோர்கள் ஸமீபத்தில் வஸிக்கவும் பெறலாம்; பெரியோர்கள் ஆசாரங்களை ஆசரித்தும் வரலாம்; இத்தனையிருந்தும் அந்தக்கரணசுத்தியில்லாமலிருக்கலாம். அந்தக்கரண சுத்தி இல்லையாயின், களங்கமற்ற புகழ் கிடைக்காது; அபவாதத்திற்காளாவான். 'த்விஜராஜ' என்பது உத்தமப்ராஹ்மணருக்கும், சந்த்ரனுக்கும் பெயர். சந்த்ரனுடைய உடலிலேயே அவனுக்கு அடையாளமாக மான்வடிவான களங்கமிருக்கிறது. சந்த்ரனுக்குள்ளே இருக்கப் பெற்றாலும், நக்ஷத்ரமார்கத்தில் ஸஞ்சரிக்கப்பெற்றாலும், ப்ராஹ்மணச்ரேஷ்டர்கள் ஆச்ரமங்களில் வஸிக்கும் மான் வடிவமான அக்களங்கம் களங்கமாகாமலிராது. ஸத்துக்கள் ஸமீபத்திலிருந்தாலும் ஸத்துக்களின் ஆசாரத்திலிருந்தாலும், உள்சுத்தியில்லையாயின் உள் அழுக்கிருந்தால் அபவாதத்திற்கே இடமாவான். (38)

𑌅𑌵𑌕𑍍𑌰𑌃 𑌤𑌾𑌰𑌕𑌾𑌧𑍀𑌶𑌃 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌪𑍍𑌰𑌿𑌯𑍋𑌦𑌯𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌂 𑌦𑌿𑌶𑌮𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌪𑌤𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ॥ ௩௯ ॥

அவக்ர: தாரகாதீச: பரிபூர்ணப்ரியோதய: ।
ப்ராசீம் திசமதிக்ரம்ய பதனம் ப்ரதிபத்யதே ॥ (39)

(ப-ரை) 𑌅𑌵𑌕𑍍𑌰𑌃 [அவக்ர:] - வக்ரஸ்வபாவமில்லாமல் ருஜுவானவரும் (கோணல் வளைவு இல்லாத), 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌪𑍍𑌰𑌿𑌯𑍋𑌦𑌯𑌃 [பரிபூர்ணப்ரியோதய:] - எங்கும் பூர்ணப்ரகாசமாக உலகத்திற்கு ப்ரியமான உதயத்தையும் பெருமையையும் உடையவரான, 𑌤𑌾𑌰𑌕𑌾𑌧𑍀𑌶𑌃 [தாரகாதீச:] - ஸம்ஸாரத்திலிருந்து தாண்டுவிக்கிறோமென்னும் ஆசிரியர்களில் தலைவரான ஜகத்குருவும் (நக்ஷத்ரங்களுக்குப் பதியான சந்திரனும்), 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌂 𑌦𑌿𑌶𑌂 [ப்ராசீம் திசம்] - புராதனமான ஸந்மார்க்கத்தை (கிழக்கு திக்கை), 𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 [அதிக்ரம்ய]-மீறினால் (தாண்டி), 𑌪𑌤𑌨𑌂 [பதநம்] - பாதித்யத்தை (விழுகையை), 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 [ப்ரதிபத்யதே] - அடைகிறான்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— சந்திரனை ஆச்ரயித்த மான்வடிவமான களங்கம் களங்கமேயாகுமென்றார். ப்ராசீன மார்க்கத்தை மீறினால் சந்திரனும், சந்திரனைப் போல அஞ்ஞான இருட்டைப் போக்கி ஞானவெளிச்சத்தைக் கொடுத்து



வானேற்றவேண்டிய ஜகத்குருக்களும், தாமே விழுவாராவாரென்கிறார். குருக்களைச் சந்திரனென்பர். தமஸை நீக்கி ஞானவொளியைப் பரவச்செய்பவர். 'என்னை அவித்யையின் அக்கரைக்கு தாண்டுவைக்கிறீர்; நீரே எங்கள் பிதா' என்பர் சிஷ்யர் குருக்களைப் பார்த்து. 'தாரகர்கள்' ஸம்ஸாரக்கடலைத் தாண்டுவிப்பவர், அவர்களுள் தலைவர் ஜகத்குருக்கள். அவர்கள் உண்மையில் உலகத்தைக் காக்குமெண்ணமே கொண்டவராயிருக்கலாம்; கோணல் புத்தியல்லாதவராயுமிருக்கலாம். பூர்ணசந்திரனைப்போல் உலகத்தாரால் ஸந்தோஷத்துடன் 'பூர்ணர்' 'பரிபூர்ணர்' என்று கொண்டாடப்படலாம். இத்தனையிருந்தும் ப்ராசீனமான ஸநாதனதர்மமார்க்கத்தை அதிக்ரமித்தால் ப்ராசீன ஸம்ப்ரதாய பதவியை விட்டால் அவர்களே ஸம்ஸாரக்குழியில் விழத்தக்க பதிதராவார். சந்திரன் கிழக்குத்திக்கைத் தாண்டினால் கீழே விழுந்து அஸ்தமிக்கிறான். உச்சியேறியும் கீழே விழுவர். 'ப்ராசீம் உபேத்ய பதவீம் யதிராஜத்ருஷ்டாம்'. (39)

𑌪𑌤𑌤𑌾𑌂 𑌹𑌨𑍍𑌤 𑌕𑍇𑌷𑌾𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌭𑌜𑌤𑍇 𑌮𑌲𑌿𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 ।
𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌵𑌰𑍍𑌣𑌯𑍋𑌗𑍋𑌽𑌪𑌿 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌤𑌾𑌮𑍍 ॥ ௪௦ ॥

பததாம் ஹந்த கேஷாஞ்சித் பஜதே மலிநாத்மநாம் ।
விசுத்தவர்ணயோகோऽபி விபரீதநிமித்ததாம் ॥ (40)

(ப-ரை) 𑌮𑌲𑌿𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 [மலிநாத்மநாம்] - பாபசீலராய் (நீலவர்ணமுடைய, கருப்புநிறமுடைய), 𑌪𑌤𑌤𑌾𑌂 [பததாம்]- பாதித்யத்திற்குக் காரணமான துஷ்டாசாரமுடையாரான (கீழே விழும்), 𑌕𑍇𑌷𑌾𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 [கேஷாஞ்சித்] - சிலருக்கு, 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌵𑌰𑍍𑌣𑌯𑍋𑌗𑍋𑌽𑌪𑌿 [விசுத்தவர்ணயோகோபி]-உயர்ந்த சுத்தஜாதியில் பிறப்பும் (சுத்த வெளுப்புவர்ணமடைதலும்), 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌤𑌾𑌂 [விபரீதநிமித்ததாம்] - நேர் விபரீதமான பலனிற்கு நிமித்தமாகுகையை, 𑌭𑌜𑌤𑍇 [பஜதே]-அடையும், 𑌹𑌨𑍍𑌤 [ஹந்த] - இதென்ன ஆச்சர்யம் !

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— முன் ச்லோகத்தில் உலகத்தைக் கரையேற்றுகிறோம் என்பவரும் பழைய முறையை விட்டால் தாமே பதிதராவார் என்றார். இங்கே "துராசாரரான பதிதருக்கு, வீழ்வாருக்கு, உயர்குலமும் சுத்த வெண்மை வர்

ணமும் அதிகக் கெடுதலின் மிகுதிக்கே நிமித்தமாகுமென்கிறார். அவர்களுக்கு ஸம்பந்தப்பட்ட நன்மையும் எண்ணிறந்த கெடுதிக்கே ஹேதுவாகும். சிரஸ்ஸிலுள்ள கருங்குழல் கழுத்திலும் முகத்திலும் கீழே விழும் ஸ்வபாவத்தையுடையது; ஸ்வயம் கருப்பானது. ஸ்வபாவமும் கருப்பு; செய்கையும், விழுதல். இதற்கு ஒருகால் மூப்பில் சுத்த வெண்மைநிறம் வருகிறது. கருமையே போய்விடுகிறது. இந்த சுத்த வெண்மை வருவதும் மூப்பின் முதிர்வைக் காட்டி, வரப்போகும் மஹாப்ரயாணத்திற்கு அடையாளமாகிறது. மரத்தின் உச்சியிலுள்ள கருப்பு நிறமான இலைகள் இலையுதிர் காலத்தில் பழுத்து சுத்த வெண்மையாகிக் கீழே விழும்; வெள்ளையாவது அவற்றிற்குக் கீழே விழக் காரணமாகும். அவை விழுந்து அவற்றின் ஸ்தானத்தில் வேறு நிறமான தளிர்கள் கிளம்பும். கொடிய செய்கை பதனத்திற்கு (விழுகைக்கு)க் காரணமாயிருப்பது என்பதுபோல், வெண்மை விழுகைக்கு நிமித்தமாகிறது. துராசாரமுடையவர் உயர்குலத்தோராயின், அவர்களுக்குத் தண்டனை அதிகம். குலமுயர, கெட்ட செய்கைக்குத் தண்டனை அதிகம். தாழ்ந்த குலத்தாரின் துராசாரத்திற்குத் தண்டனை அத்தனை பெரிதன்று. வித்வானுக்குத் தண்டம் அதிகம். (40)

𑌪𑌤𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌰𑍂𑌢𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑌪𑌿 ।
𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 𑌸𑌞𑍍𑌛𑌾𑌦𑍍𑌯𑌤𑍇 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌧𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 𑌰𑌾𑌗𑌿𑌣𑌾 ॥ ௪௧ ॥

பதனாநந்தரம் க்ருச்ராத் ப்ரரூட: சுத்திமானபி ।
த்விஜ: ஸஞ்சாத்யதே கஶ்சித் அதரேணாபி ராகிணா ॥ (41)

(ப-ரை) 𑌪𑌤𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 [பதனாநந்தரம்] - பதிதனான பிறகு, (கீழே விழுந்த பிறகு), 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑍍 [க்ருச்ராத்] - ப்ராயச்சித்தம் செய்து, (கஷ்டப்பட்டு), 𑌪𑍍𑌰𑌰𑍂𑌢𑌃 [ப்ரரூட:] - பாதித்தியத்திலிருந்து மேலே கிளம்பி, (முளைத்து வளர்ந்து,) 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑌪𑌿 [சுத்திமானபி] - சுத்தியை அடைந்தாலும், (வெண்மையோடிருந்தாலும்), 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 [கஶ்சித் த்விஜ:] - ஓர் ப்ராஹ்மணன், (ஓர் பல்), 𑌰𑌾𑌗𑌿𑌣𑌾 [ராகிணா] - த்ரவ்யஆசையையுடைய, 𑌅𑌧𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 [அதரேணாபி] - தாழ்ந்தவராலே கூட, (உதட்டாலே), 𑌸𑌞𑍍𑌛𑌾𑌦𑍍𑌯𑌤𑍇 [ஸஞ்சாத்யதே] - மூடிவைக்கப்படுகிறான் (படும்).



அவதாரிகையுடன் தாத்பர்யங்கள்:— உயர் குலத்தோன் பதிதனானால் தண்டனை அதிகமென்றார். பதிதனானால் கடினமான க்ருச்ரம் முதலிய ப்ராயச்சித்தங்களால் ஓர் சுத்தியை அடையலாம் பெரும் குற்றமாயின், த்ரவ்யத்திற்காசைப்படாத பெரியோர் (அக்ஷராஸான தர்மகாமர்கள்) இவனுக்கு ப்ராயச்சித்தம் செய்விக்க ஸங்கோசப்படுவர். த்ரவ்யத்திற்காசைப்பட்ட சில வைதிகர் ப்ராயச்சித்தங்களைச் செய்துவைப்பார். ப்ராயச்சித்தம் செய்துவைத்தாலும், பெரியோர்கள் கோஷ்டிகளில் கலந்து பரிமாற யோக்யர் அன்று என்று நினைத்து ப்ராயச்சித்தம் செய்துவைத்த த்ரவ்யராகிகள்கூட இவர்களை மூடிவைப்பர். பஹிரங்கமாக வ்யவஹாரம் செய்ய வெட்கப்படுவர். இங்கே கீழே விழுந்த 'பல்' த்ருஷ்டாந்தம். விழுந்த பல் கஷ்டப்பட்டு முளைத்து நன்றாய் வளர்ந்தது. ப்ரதிதினமும சுத்தி செய்யப்படுகிறது. ஆயினும், அது சிவந்த அதரத்தால், (உதட்டினால்) மூடப்படுகிறது. கீழே விழுந்தது பின்முளைத்தாலும், எத்தனை சுத்திசெய்தாலும் அதை வெளியே காட்ட வெட்கப்பட்டு ராகத்தால் சிவந்த உதடு அதை மூடுகிறது. 'த்விஜ' என்பது 'ப்ராஹ்மணன்', 'பல்', 'பக்ஷி, இவற்றைச் சொல்லும். பக்ஷியும் ஆகாசத்தில் பறக்க ஆரம்பித்து கஷ்டப்பட்டு மிகஉயரப்போகும். பக்ஷி சுத்தமானதே, ஆயினும் ஆசைபிடித்த வ்யாதனால் பாணங்களால் தகையப்படும். (41)

𑌜𑍋𑌷𑌮𑍇𑌕𑌪𑌦𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑌨𑍍𑌨𑌿𑌕𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 𑌕𑍍𑌷𑌣𑌾𑌦𑍍𑌗𑍍𑌰𑌸𑌨𑍍 ।
𑌬𑌹𑌿𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌬𑌕𑍋𑌽𑌪𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 ॥

ஜோஷமேகபதே ஸ்தித்வா ஸந்நிக்ருஷ்டான் க்ஷணாத் கஸன் ।
பஹிர்தர்சிதஸம்சுத்தி: பகோபி ஆஹாரமர்ஹதி ॥ (42)

(ப-ரை) 𑌜𑍋𑌷𑌂 [ஜோஷம்] - ஓசைப்படாமல், வாயை மூடிக்கொண்டு, 𑌏𑌕𑌪𑌦𑍇 [ஏகபதே] - ஒரே நிலையில் (ஒரு காலால்), 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 [ஸ்தித்வா] - நின்று, 𑌸𑌨𑍍𑌨𑌿𑌕𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 [ஸந்நிக்ருஷ்டான்] - பக்கத்திலிருப்பவரை, 𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 [க்ஷணாத்] - ஏகாக்ரமான கவனத்தினால் (ஒரு க்ஷணத்தில் திடீரென்று

நாசம் செய்து), க்ஸந் [கஸன்] - தின்றுகொண்டு, பஹிர்தர்ஶிதஸம்ஶுத்தி: [பஹிர்தர்சிதஸம்சுத்தி:] - வெளிக்கு சுத்த வெண்மையான வர்ணத்தைக் காட்டிக்கொண்ட (மேலுக்கு ரொம்பவும் சுத்தன்போல வேஷம் போட்டுக்கொண்ட), பகோபி [பகோபி] - கொக்கும் (கொக்கைப்போன்ற ஆஷாடபூதி), ஆஹாரமர்ஹதி [ஆஹாரமர்ஹதி] - பிடிக்கத்தக்கது, நிக்ரஹிக்கத்தக்கவர், பக்ஷிக்கப்படும் அல்லது உணவுபெறத்தக்கது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— கண்ணை மூடிக் கொண்டு ஒரு காலாலே நின்றுகொண்டு தவவேடம் பூண்ட சில கபடிகள் வெளிக்கு மிகவும் சுத்தர்போலக் காட்டிக்கொண்டு தம்மை ஆச்ரயித்தவரையும் ஸமீபத்திலுள்ளவரையும் ஏமாற்றி விழுங்கிவிடுவர்கள்; அவர்கள் த்ரவ்யங்கள் முதலியதை உரிஞ்சி விடுவார். இது கொக்கின் ஸ்வபாவம், கண்ணை மூடுவதுபோல் வைத்துக்கொண்டு ஏகாக்ரமாக தனக்குக் குறிப்பான மீன்களை லக்ஷ்யம் பார்த்துக்கொண்டு அருகிலுள்ள மீன்களைக் கொத்தித் தின்னும். ஸமீபத்திலுள்ள பிறரை வஞ்சிக்கும் ஸ்வபாவத்தை யுடையவரை 'பகவ்ருத்திகள்' என்பர். 'வாயுந் திரையுகளும் கானன் மடநாராய்' என்ற பாசுரத்தின் வ்யாக்யானங்களைக் கவனிக்க. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்றபடி அந்தக் 'கொக்கையும் அதே ஸமயத்தில் ஒரு வேடன் கொல்லுவான். 'யவன் உயிருடனிருப்பதால் பல ஜநங்கள் பிழைப்பரோ, அவன் தான் ஜீவிப்பவன், மோசக்காரக் கொக்குக்கூட மூக்கினால் பக்கத்திலுள்ள ஜந்துக்களைக் கொன்று வயிறு வளர்க்கவில்லையோ' என்ற ச்லோகமும் இங்கே திருவுள்ளத்திலுள்ளது. கொக்கைப்போல் அருகேயுள்ளவரை வஞ்சித்து ஜீவிப்பவருடைய ஜீவனமும் ஒரு ஜீவனமாகுமோ? (42)

த்விஜஸ்ய ஸிதபக்ஷஸ்ய கவேரபி நிரஸ்யதே ।
ந ஹம்ஸ இதி ஸாஜாத்யம் ஶதிஶப்திதவ்ருத்திபி: ॥ ௪௩ ॥

த்விஜஸ்ய ஸிதபக்ஷஸ்ய கவேரபி நிரஸ்யதே ।
ந ஹம்ஸ இதி ஸாஜாத்யம் சதிசப்திதவ்ருத்திபி: ॥ (43)



அயத்தில் பூர்வோத்தர கண்டங்களில் ஏகதாத்பர்யமா யிருக்க உத்தரகண்டத்தில்மட்டும் பிராட்டிக்குக்கைங்கர்யோத்தேச்யதையை ஒப்புக்கொள்ளுவதும் பூர்வகண்டத்தில் தாத்பர்ய ந்யாயஸித்தமானப்ரபத்யுத்தேச்யத்வத்தைக் கைவிட்டுவிடுவதுமாக வைஷம்யத்தைக் கல்பிப்பது உசிதமன்று என்று கேட்பதற்கு அயநத்திலேயே நியாமகங்காட்டி விடையளிப்பரேல் ஸம்பாதிதஸமாதானமாகுமேயன்றி, ப்ரமாணஸாரஸ்யத்தால் ஸித்தித்த அர்த்தத்தை உபாயத்வப்ரஸஞ்ஜநத்தால் பாதிக்க முடியாது. சரணவசோத்தரம் த்விவசநம்போல், ஸ்ரீமத்பதோத்தரம் ஏகவசநம் இருப்பதால், த்விவசனத்தினால் பிராட்டிக்கு உபாயத்வம் பாதிக்கப்படுவதானால், ஏகவசநத்தினால் உபேயத்வமும் பாதிக்கப்பட்டுவிடாதோ? இதனால் "விஶேஷணதயா அநந்தரஸ்ய ப்ராப்யாநுவிவக்ஷாயாஞ்ச ப்ராப்யாந ந்தவிஶேஷ்யசரணத்விவசநைவ ததாவிஶிஷ்டதா" என்கிற காரிகாவ்யாக்யானஸூக்தியின் பேரில் இவருடைய தூஷணம் ஸம்பாதிதம். ஸாமாநாதிகரண்யம் இல்லாமையால் பிராட்டிக்கு ப்ராப்யாநுப்ரவேசம் என்பதற்கு ஸமாதானம் முன்பே சொன்னோம்.

ஸித்தே ஶ்ரிய உபேயத்வே யதா ப்ராப்யத்வமீக்ஷிதம் ।
ஸித்தே ஶ்ரிய உபாயத்வே ததோபாயத்வமிஷ்யதாம் ॥
உபாயத்வஸமர்த்தநம் நாம அஷ்டமோऽதிகார: ॥

## ஒன்பதாவது அதிகாரம்.

ஸ்வஸ்மின் ஶேஷித்வஸங்கீர்த்தநாதைகரூப்யப்ரதீதயே ।
ப்ரதிபக்ஷிக்ருதாக்ஷேபஸமாதாநம் ப்ரதீக்ஷ்யதே ॥

த்வயாதிகாரத்திலுள்ள சரணாமிதிகாரிகையைப் பற்றியும் அதின் வ்யாக்யானத்தைப்பற்றியும் ப்ரதிபக்ஷியின் ஆக்ஷேபங்கள் ஏழுக்கும் ஸமாதானத்தைமாத்திரம் இவ்வதிகாரத்தில் ஸங்க்ரஹிக்கிறோம்.

(1) ஸ்ரீ ஆச்சான்பிள்ளையின்மீது கூறப்படும் தூஷணம் ஶப்தாத்யாஹாரதோஷம்.

(2) ஶப்ததோஷமாவது — ஸ்ரீமந்நாராயணஸ்ய சரணௌ என்கிற விக்ரஹத்தில் ஸ்ரீஸ்வவிசிஷ்டரும் நாராயணனிடத்தில் தோன்றுகிறது. ஸ்ரீஸ்வவிசிஷ்ட நாராயண ஸம்பந்திகள் இரண்டு சரணங்களே. ஆகையால் 'த்வ்யேகயோ:' என்கிற ஸூத்ரத்தின்படி த்விவசநமே ஸாது. மேலும், நான்காவது ஆக்ஷேபபரிஹாரத்தில் நிர்ணயிக்கப்போகிறதை அநுஸரித்து ஸமஸ்யமாந நியமத்தின்படி வ்யாஸஸமஸ்தநாராயணனுடைய சரணத்தை மாத்திரம் போதிக்குமிடத்தில் நாராயணஸ்ய சரணௌ என்றே ப்ரயோகம்போலவே ஸமாஸத்திலும் த்விவசநமே ஸாதுவாகையால் பஹுத்வவிவக்ஷையால் 'பஹுஷு பஹுவசநம்' என்கிற அநுசாஸநத்தின்படி வசநம் இங்கு ப்ரயோகிக்கப்படக்கூடாது. 'ஸஹஸ்ரபாத்' இத்யாதியின்படி நாராயணனுக்கே அநேக சரணங்கள் கூடுமென்று பஹுவசநநிர்வாஹமும் ஆபாதகருக்கு அது விவக்ஷிதமில்லாமையால் அநுபபந்நம். மூன்றாவது ஆக்ஷேபபரிஹாரத்தில் இது வ்யக்தம். 'ஸாமாத்யராஜசரணௌ' என்கிற உதாஹரணத்தினால் ஸ்வாபிமதார்த்தஸமர்த்தநம் ந்யாயஸ்யஜாத்யே நபஷ்டவ்யுதாநதுல்யமாகிறது. ஸாமாத்யவிசிஷ்டனை ராஜா சதுஷ்பாத்து ஆகிவிடமாட்டானன்றோ? ராஜா சரணௌ என்கிற ப்ரயோகம் இல்லாமற்போனாலும், 'ஸாமாத்யோ ராஜா சரணௌ' என்கிற ப்ரயோகம் ராஜாமாத்யௌ சரணௌ என்கிறதுபோலே கூடும் என்று சொல்லமுடியாததுபோல், ராஜாமாத்யயோஸ் ஸுவர்ணஸ்ரவணா: என்பதுபோல், ஸாமாத்யராஜ சரணா: என்றும் ப்ரயோகிக்கலாம் என்பதுவும் அநுபபந்நமே. அதே த்ருஷ்டாந்தத்தினால் ராஜாமாத்யயோ: என்று த்விவசநம்போல் ஸாமாத்யயோ: என்று த்விவசனமும் கூடுமோ? 'ஶூர்ப்பணகாஸ்ய நிவீப்யவாதா:' என்று பஹ்வாகவிப்ரயோகம்போல் ஸம்ப்ரதிபந்ந த்ருஷ்டாந்தம் காட்டவேண்டாமோ? ஆகவே பஹுவசநாஸாதுத்வம் ஸ்தாயீ.



(3) அர்த்ததோஷமாவது — ஆபாதகருக்கு 'ஸஹஸ்ரபாத்' இத்யாதி ப்ரமாணங்கள் விவக்ஷிதங்களாகில் "அவனும் அவளுங்கூடி உபாயமென்னில்' என்பது அநுபபந்நம். அத யாகேஷ்வபி சரணபஹுத்வம் உத்துங்கலோசனவிஷமன்றோ? விசிஷ்டஸ்யைகத்வாபிப்ராயத்தாலும் 'ஸநாதநாம் ஶ்ரீவிசிஷ்டா ஜாதி: ப்ராயேண' என்கிற வசனத்தினாலும் இத்தால்...... திருமேனியை நினைக்கிறது என்று லோகாசார்ய ஸ்ரீஸூக்தியால் ஸ்ரீநாராயணர்களுடைய விக்ரஹங்கள் இரண்டு என்கிற தாத்பர்யத்தாலும் த்விவசநாந்தநிர்த்தேசம் கூடுமாகையால், இரண்டென்னவொண்ணாது என்றது ஸர்வதா அநுபபந்நம். ஸஹஸ்ரபாத் இத்யாதிகளைக்கொண்டு 'நாலென்னவேண்டும்' என்று நியமிப்பதும் துச்சகம். ப்ரத்யேகம் சரணத்வயம் விவக்ஷிதமாகிலன்றோ நாலென்னவேண்டும்? ஸ்ரீமந்நாராயணயோ: சரணௌ என்று விக்ரஹமா? ஸ்ரீமந்நாராயணஸ்ய சரணௌ என்பதா? ஆத்யே த்விவசநாந்வயம் பாதிதம். த்விதீயே பஹுவசநாந்வயம் பாதிதம்.

(4) ஸாரஸ்வதீகியில் காட்டிய "ஸமஸ்யமாநபதார்த்த ஸம்பந்தித்விவசநாநாம் வ்யாஸஸமாஸாநுவாதகா:" என்கிற நியமம் ஶாஸ்த்ரஸம்மதியில் ஸம்ப்ரதிபந்நம். 'பரவல்லிங்கம் த்வந்த்வதத்புருஷயோ:' என்கிற ஸூத்ரத்தின் வ்யாக்யானத்தில் "த்வந்த்வே ...... த்வந்த்வஸ்ய விஶேஷ்யவத் லிங்கம் வ்யாஸவத் லிங்கமுத்தரபதலிங்கமயம் விதி:" என்றார்கள் வையாகரணர். இங்கு த்வந்த்வத்திலும் வ்யாஸமாகையால் அதை அநுஸரித்து நபும்ஸகலிங்கம் ப்ராப்தமாவதால் அதற்கு அபவாதமாக இந்த ஸூத்ரத்தினால் பரவல்லிங்கம் விதிக்கப்படுகிறது என்றதனால் இந்த நியமம் ஸாரஸ்வதீகாரரால் கல்பிதமன்று என்பது வ்யக்தமாகிறது.

இந்த நியமத்தை ஒப்புக்கொள்ளாவிடில் வரும் பாதகத்தையும் நிரூபிக்கிறோம்- ஸமவ்ருதி: என்கிற உதாஹரணத்தை எடுத்துக்கொள்வோம். இந்த சப்தம் புல்லிங்கமாய் ப்ரயோ

க்கப்படுவதுபோல் வையதிகரண்யத்தை அநுஸரித்து ரக்ஷாவிஷ ஸ்த்ரீலிங்கமாயும் நிர்தேசிக்கப்படுவதில்லை, இவ்வாறே வையதிகரண்யமுகஸம்ப்ரதாயையும் சேர்த்து ஏகவசநாந்தமாய் நிர்தேசிக்கப்படுவதுமில்லை. இந்த நியமத்தை ஒப்புக் கொள்ளாவிடில் ஏகவசநாந்தமாயும் ரக்ஷாவிஷ ஸ்த்ரீலிங்கமாயும் ப்ரயோகிக்கப்படவேண்டிவரும். ஸ்வார்த்தமசேத ப்ரயோக ஸம்பந்தவதிஸம்பந்தமாத்திரத்தில் அந்வயிக்கக்கூடிய லிங்க ஸங்க்யைகளையே போதிக்கும் லிங்கவசநங்கள் ப்ரயோகிக்கப் படவேண்டிய நியமம் ஏற்படுவதால் தோஷப்ரஸங்க:। ஸூக்ஷ்மத்தில் ஸ்ரீமந்நாராயணஸ்ய சரணௌ என்கிற விக்ரஹத்தில் ஸாமாநாதிகரண்யம் ஸ்ரீமந்நாராயண: த்வந்த்வஸமாஸவசநம்வா ஸக்ஷ்யஸம்ஜ்ஞ்ஞா. இது வையதிகரண்யநாராயணசாப்தயமுள்ளது. நசவையதிகரண்யநிர்வாஹ்யநாஸாதிப்ரஸ. ஆகவே விக்ரஹத்தில் ஸ்ரீமந்நாராயணஸ்ய என்று ஏகவசநாந்தநிர்தேசமே ஸாதுவாகையால், ஏகத்வஸங்க்யாவிசிஷ்டநாராயணனைப் ப்ரயோக யதை த்விவசநாந்தசரணசப்தார்த்தத்துக்கே உண்டாகையால் த்விவசநாந்தநிர்தேசத்தில் விக்ரஹ வாக்யார்த்தாந்வயமும் ஸமாஸவசநத்தில் ததாவமும் ஸித்திக்கிறது.

வஸ்துதஸ்து ஸாமாநாதிகரண்யஸம்பந்திகளுடைய லிங்கங்களும் வசநங்களும் வையதிகரண்யஸமாநாதிகரணிகள் என்பது நியமத்தின் அர்த்தம். லிங்கவசநங்களுக்கு வையதிகரணாதி ஸமாநாதிகரணமாவது — ஸமவ்ருத்த்யந்யவ்யதிகரண நயே ஸதி லிங்கஸங்க்யாதய: ஸாம்யம் தத்ர. விசிஷ்டார்த்தயஸம் பந்திகளின் விசேஷணாந்வயத்தினால் தத்லாபகங்களின் லிங்க வசநங்கள் மாறுதலடையா என்றபடி. ஸந்தீர்கோ ராஜா என்று ப்ரயோகிக்குமிடத்தில் வஸ்தி, த்ருஶ்யதே, த்ருஷ்ட: என்றுப்போலுள்ள ஸாமாநாதிகரண்யப்ரயோகமே ஸாது. வஸ்த:, த்ருஶ்யேதே, த்ருஷ்டௌ என்றுப்போலுள்ள ப்ரயோகம் அஸாதுவன்றோ ? இங்கு ஸாமாநாதிகரண்யவடீம் ஸம்பந்தமான விசேஷணாம்சத்திலும் ஸாமாநாதிகரண்யவசநாத ராயநாந்வயம் விவக்ஷிக்குமிடத்தில் அதுவும் விசேஷ்யமாகிற



படியால் ராஜதந்தௌ என்கிறவிடத்தில்போல் வஸ்த: த்ருஶ்யேதே என்றுப்போலுள்ள ப்ரயோகமும் ஸாதுவாகப்ரஸங் கிக்கும். 'யல்லிங்கம் யத்வசநம்' என்கிற நியமாந்தரத்தைக்கொண் டும் இங்கு நிர்வாஹம் சக்யம். ப்ரத்யக்ஷ யதிஶ்வாரத த்ருண விசேஷணாம்சத்திலும், விசேஷணீஸம்பந்தவசநா ராயநம் அந்வயிப்பதால் அந்த விசேஷணாம்சமும் விசே ஷ்யமாவதால் ஸந்தீர்க: வஸ்த: இத்யாதிப்ரயோகத்துக்கு ப்ரஸங்கமே அந்த நியமம். மேலும், வேதாந்தா வேதாந்த மஹத: த்ருஷ்டௌ என்றுப்போலுள்ள ப்ரயோகம் உண்டாகை யால், யல்லிங்கம் என்ற நியமத்திற்கு அங்கும் பங்கம் ஏற்படுகி றது. ஆகையால் நியமாந்தரகல்பநம் அநாவச்யகம். ஸாமாநா திகரண்ய நியமத்தின்படி உக்தப்ரஸங்கமில்லை. ஸாமாநாதிகரண்ய வசநாராயநத்துக்கு ஸாமாநாதிகரண்யவடீம் ஸம்பந்தவி சேஷணாம்சத்திலும் யதிச்வாரதத்ருணாந்வயம் உண்டாகி லும், அந்த வசநாராயநத்துக்கு உக்தவிசிஷ்டவடீம் ஸம்பந்த விசேஷ்யாம்சஸமாநாந்வயத்தில் யாத்ருசவசநம்முதலியவைப்ர யோகிக்கப்படவேண்டுமோ, தாத்ருசமே தத்கவிசேஷணாம் சத்தோடு வாரதத்ருண ஸந்நயம் உண்டாகிலும் ப்ரயோகிக் கப்படவேணுமென்று நியதி ஏற்படுகிறதன்றோ. உக்தநியமத் தின் ஆவச்யகதையை உபபாதித்து தெரிவிப்பதற்காக 'ஸாமா ந்யா ராஜா ஸந்தீதி ப்ரயோக:, நது வஸ்த: இதி' என்று நம்தேசிகன் உதாஹரித்தது. ததாச ப்ரக்ருதே நாராயணஸமாநாதிகரண்யம் சரணசப்தத்துக்கு விவக்ஷிக்குமிடத்தில் ஆஸம்பந்தம் சரணசப்தத்துக்கு விவக்ஷிக்குமிடத்தில் போலவே வசநலிங்கஸம் ஆவச்யகமென்று ஸித்திப்பதால், நாராயணஸ்ய சரணௌ என்று ப்ரயோகிக்க முடியாதாப் போலே ஸ்ரீமந்நாராயணசரணௌ, ஸ்ரீமந்நாராயணஸ்ய சர ணௌ என்றுப்போல் ப்ரயோகம் கூடாது என்று தெரிவிப் பதற்காக 'ஸ்வாரஸ்யதாரஸ்ய நிவேஶ்ய வாதாவிதி ப்ரயோக: நது வாதாந் இதி' என்று இரண்டாவது த்ருஷ்டாந்தத்தைக் காட்டியது. ஸாரதீபிகையிலும், ஸாராஸ்வாதிநியிலும் ஸாக்ஷ ரூபமாய் உதாஹரிக்கப்பட்ட ஸாமாந்யா ராஜேத்யாதி

த்ருஷ்டாந்தத்வயத்துக்கு பரஸ்பரமும் தார்ஷ்டாந்திகத்தோடும் ஸமஸ்யமாந பதார்த்தைகதேஶாந்வயாஸ்தல வசநலிங்காதிநா ஸாம்யம் இருக்க, அநுபயுக்தமான ஆகாராந்தரத்தால் வைஷம்யத்தை இட்டுச்சொன்ன தூஷணம் தூஷணமாக மாட்டாது. 'ஸர்வாகாரேண ஸாம்யம் க்வசிதபி ந ஹி தேஷு கேநசித் த்ருஷ்டாந்தேஷ்விஷ்டம்' என்று ஸாராவளி. ஸம்பித்யாஹ்ருத ப்ரயோகத்துக்கு விஶிஷ்டாந்வயோசித வைஶிஷ்ட்யம் உள்ளவிடத்திலும் விஶிஷ்டவ்ருத்தியோசித வைஶிஷ்ட்யமுள்ள விடத்திலும் உக்தநியமம் உண்டென்பதற்காகவும் த்ருஷ்டாந்த த்வயப்ரதர்ஶநம். உக்தநியமத்தைக்கொண்டே காரிகாவ்யாக்யானத்திலும் ஸாரவிவரணியிலும் 'ஸுக்ஷணவிஶிஷ்டோ ராமஹஸ்த: க்ருத: ப்ரத்யுத்ர ஏகவசநம் ந ஸ்யாத்' என்றும் 'த்விவசந ப்ரஸங்க:' என்றும் ஏகரூபமான ஆபாதனம் செய்யப்பட்டது.

உக்தநியமஶரீரத்தில் லிங்கவசநஶப்தங்கள் ஸாம்ஸர்கிகதர்மபரங்களாகில் ப்ரத்யயஸம்பந்தமும் ப்ரத்யாஸத்திஸாபேக்ஷமும் ஸாக்ஷாத்தாகக் கொள்ளவேண்டும். லிங்கம் அர்த்தநிஷ்டம் என்பது 'ஸங்க்யாநம் ஶப்தாநாம் லிங்காநாம் த்ரவ்யம் லிங்காநாம் அபேக்ஷதே' என்கிற மஹாபாஷ்ய வசனத்திஞல் ஸித்தம். 'வசநம் ஸங்க்யா' என்று கௌமுதீ. ஶப்தபரங்களாகில் ப்ரயுக்தத்வ ஸம்பந்தம் விவக்ஷணீயம். ஆகவே வரணாதிகாரிகையால் ஆச்சான்பிள்ளையின் வ்யாக்யானத்துக்கு உக்தநியமஸம்ப்ரஸங்கம் பரிஹாரமாகச்சொன்னபடி, 'நாராயணபதம் புல்லிங்கமாயும் (விஶேஷ) ஏகவசநாந்தமாயுமிருப்பதஞல் வரணசப்தம் புல்லிங்கமாயும் ஏகவசநாந்தமாயுமே இருக்கவேணும் என்று ஸம்பத்யாதிந வாக்யத்துக்கு ஸமர்த்தனம் செய்தது அபூர்வவ்யுத்பத்தி விலஸிதம். ஆகையால் ஸ்ரீமந்நாராயணவரணௌ, ஸ்ரீமந்நாராயணாய நம இத்யாதி ப்ரயோகங்கள் ஸ்வரஸங்களே.

(5) i உக்தநியமஶரீரத்தில் வ்யக்தமான லிங்காம்சத்துக்கும் ப்ரக்ருதத்தில் ஸமந்வயம் உண்டு. வரணஶப்தாந்வய



விஶேஷ்யவாசக நாராயணனேடு மாத்திரம் அந்வயிக்குமிடத்தில் வரணஶப்தம் எந்த லிங்கவசனமுள்ளதாகுமோ, அதே லிங்கவசனங்கள்தான் விசிஷ்ட ப்ரதீயமாந விஶேஷணாந்வய ஸ்தலத்திலும் என்பது நியமத்தின் தாத்பர்யமாகையால் நாராயணவரணௌ என்கிற இடத்தில் போலவே ஸ்ரீமந்நாராயண வரணௌ என்கிற இடத்திலும் லிங்கமிருக்கிறதன்றே? லிங்கபதோபாதானத்துக்குப் பிரக்ருதோபயோகம் இராமற் போனாலும், ஸம்ப்ரீதோ த்ருஷ்ட: இத்யாதி ஸ்தலாந்தரத்தில் உபயோகமிருந்தாலும் ந்யாயம் ஸரிதானே? 'யல்லிங்கம் யத்வசநம்' என்கிற நியமத்திலுள்ள லிங்கவிபக்திகளுக்கு ராஜா ஸகி என்கிற இடத்தில் ப்ரயோஜனம் இல்லாமையால் ந்யாயம் பாதிதமாகுமோ? ஸம்ப்ரத்யயோஸ்ஸ்த்ரீயா என்கிற அநுஶாஸநத்திஞல் சைத்ரேண த்ருஷ்டோ க: என்கிற இடத்தில் சைத்ரபதோத்தரம் த்ருதீயை என்றுல் ப்ரக்ருதோபயோகமில்லாமையால் அநுஶாஸநத்தில் கரணபதோபாதானம் வ்யர்த்தமாகிவிடுமோ?

ii ஸ்ரீமந்நாராயணவரணௌ என்கிறவிடத்தில் ஒரு பதத்தின் லிங்கத்தை அநுஸரித்து மற்றொரு பதத்தின் லிங்கம் இருக்கவேண்டும் என்பது நியமத்தின் கருத்தன்று.

iii லிங்கவசநங்களோடுகூட விபக்தியையும் சேர்த்து எடுக்காமல் விட்ட காரணம் அந்யதரோபாதானவையர்த்த்யம் வரும் என்பது.

iv விபக்தி வேருக இருக்கலாம் என்று நினைவன்று, 'ஸத்ரு ஶஸ்த்ரிஷு லிங்கேஷு ஸர்வாஸு ச விபக்திஷு। வசநேஷு ச ஸர்வேஷு யந்ந வ்யேதி தத்வ்யயம்' என்கிற ச்ருதியில் விபக்திவசநாந்யதரோபாதானவையர்த்த்யத்தை ஶங்கித்து 'த்ரு விபக்திவசநஶப்தௌ காரகஸங்க்யாபரௌ। ந த்ரு ப்ரத்யயபரௌ। அந்யதரஹணவையர்த்த்யாத்'என்றுர்களே வையாகரணர். வ்யுத்பத்திவாதத்தில் "வேதா: ப்ரமாணமித்யாதய: ஸமம் ப்ரயோகா:, விஶேஷ்யவிஶேஷணவாசகபதயோ ரஸதி விஶேஷாநுஶாஸநே ஸமாநவசநகத்வநியமாத்"

என்பது ஸூத்ரவாக்யத்வனிதி:. இங்கு லிங்கம் விபக்தி இரண்டையும் சேர்த்து எடுக்காமல் விட்ட காரணம் என்னே? வேறாக இருக்கலாம் என்று நினைவா? இதன்பரிஹாரரீதியில் தெளியவும். உதாஹ்ருதநியமஶரீரத்தில் லிங்கவசனசப்தங்கள் ப்ருதக்பதங்களாகில் ஸமுதாயஸம்பந்தமும் கொள்ள வேண்டும் என்பது முன்னாலேயே சொல்லப்பட்டது.

(6) i உக்தநியமத்தின்படி ஸமாஸகடிதமாகவோ, தத்கடிதமாகவோ உள்ள வாக்யார்த்தத்தின் வசனம் நியதிக்கப்படக் கூடிய இடத்திலேயே ப்ரயோகவ்யவஸ்தை பண்ணக்கூடும். ப்ரக்ருதத்தில் வ்யாக்யாதாக்கள் காட்டிய த்ருஷ்டாந்தங்களும், தாத்பர்யங்களும் அப்படிப்பட்டன. ஸதாசார்யனை குருவுக்கு இரண்டே வரணங்கள் என்கிற நியமம் உண்டு. அப்படி ஸாமாத்யனை ராஜாவைப் பார்க்கிறவர் ஒருவர் இருவர் மூவர் என்றாப்போல் ஸங்க்யாநியமம் இல்லை; ஸ்த்ரீபும்ஸாதிநியமமும் இல்லை. ஆகையால் ஸாமாந்யவசனாந்தரவசனாத்யந்தஸாமாந்யேன த்ருஷ்டவான் என்கிற ப்ரயோகமே என்று நியமம் இல்லாமையால், த்ருஷ்டவந்த: த்ருஷ்டவத்ய: இத்யாதிகள் கூடும். யஸ்ய லிங்கம் யத்வசனம் என்கிற நியமத்தின்படி விசேஷணம் விசேஷ்யத்துக்கு உள்ள லிங்கவிபக்திகளை உடையதாகவேண்டுகையால், ஸாமாந்யே வசனீத்யாதயோ ந ப்ரயோகா: என்றால், அதை ஶிரஸா வஹிக்கவேண்டுமோ? விசேஷணபதம் லிங்கவிபக்திகளை உடையதாயிருக்குமிடத்தில் விசேஷ்யவசனஸமானலிங்கத்வாதி நியமம் என்று ஸங்கோசித்து அதை நிர்வஹிப்பதுபோல் விஶிஷ்டவாசகஸமஸ்தவிசேஷ்யஸமாநயத்தை யிட்டு லிங்கவசனநியதியுள்ள வாக்யங்களுக்கு அந்த நியதி விசேஷ்ய ஸமாநயத்தில்போலவே விஶிஷ்டாநயத்திலும் ஆகவேண்டும் என்று நியமத்தின் தாத்பர்யம்கொண்டு நிர்வஹிக்கலாமன்றோ?

ii ராத்ரிஶிவஸயோஷஷ்டிநக்ஷத்ராபிகா:, உக்தரீயாஷரீய யோஷோபஶஹஸ்தவ்ருத்தி: என்றே ஸம்ப்ருத்வஞப்ரயோகம். ராத்ரி ஸஹிதஸ்ய ஶிவஸஸ்ய ஷஷ்டிநக்ஷத்ராபிகா: இத்யாதி ஸ்வீகர்த்ருப்ரயோகங்கள் ஸம்ப்ருதிவ ஜமல்ல; ஸுபக்ரப்ரயோகம்



ஒன்றிரண்டு இருந்தாலும் அது ஸமஞ்ஜஸப்ராஹ்யமே, ஸ்வரஸமாகாது. ஆக ஸ்ரீமந்நாராயணவரணனை என்று பஹுவசனக்ருதவசனவிஶிஷ்டஸப்ரயோகத்தைக் கூடாதென்றும், ஸ்ரீமந்நாராயணவரணாது என்று ஸப்ரயோகம் அவச்யம் என்றும் இவர் ஸமர்த்திக்கமுயல்வது விலக்ஷணவ்யுத்பத்திஸாஹஸமாயும் என்பதை விவேகிகள் நன்கு விமர்சிப்பது. ஸமேஸ்யமானே நியமே ப்ரயோஜனேயில் விசேஷாநுஸாஸநமில்லாத இடத்தில் ஔத்ஸர்கிகம் என்னுமது ஸயுக்கியம். ஸாமாந்யப்ரயோகவத் ஸமேஷவிசேஷ்யவாசித்வவி ||

(7) ஸமானாதிகரணவ்யதிகரணப்ரயோகங்களில் ப்ரக்ருதோபயோகிநியமஸ்தித இன்னதென்றும் அந்யத்புருஷஸ்தலங்களுக்கு நியமங்கள் வெவ்வேறு என்றும் நாம் நிஷ்கர்ஷமாகத் தெரிவிப்பதை மறுக்க ப்ரமாணலேசமும் இவருக்கு உண்டோ? ஸப்ததந்த்ரஸ்வதந்த்ரகாவ்யரான ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ஜக ஸ்ரீமத்வேதாந்தராமானுஜமஹாதேசிகன் (ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி) அருளிச்செய்திருக்கும் ஸமஸ்யானஸமர்த்யநிஷ்கர்ஷப்ரமாணத்தில் இவ்விஷய விஸ்தாரத்தையும் அழகான ஸ்ரீஸூக்திப்ரயோஜனாதரத்தையும் விஶதமாகக்கண்டுகொள்வது.

இத்யேஷா ஶனயோமானாத்ஸ்வா ஶாஸ்ரபமத்ஸ்ரு |
ஶப்தக்ரமாஹவாஸத நிரஸ்தா: ப்ரதிவக்ஷிண: ||
ரக்ஷாவரிஹாரே நாம நவமோऽதிகார: ||

பத்தாவது அதிகாரம்.

வாதிநாம் ரக்ஷாப்ரவாயகவாயவாவயிகயஜுஷ: |
தத்ராவ்யதாவிவாதிந்யஸ்த்யதீதேத்தி ஸாயந்தே ||

இனியும் ஆச்சான்பிள்ளையின் வரவரமுனிஸ்ருதீயஸூக்தியைச் சற்று விமர்சிப்போம். 'இப்பதத்தில் த்விவசநம் ஸத்விதீயமிவ்வுபாயமென்கிற ஸாஹஸவசநத்தைத் தள்ளுகிறது'

இத்யாதி ந்யாயத்தை உத்தரகண்டத்திலும் உபயோகிக்கலாமன்றோ? ஸ்ரீமதே என்றும் இப்பதத்தில் ஏகவசநம் ஸத்விதீயம் இவ்வுபேயம் என்கிற ஸாஹஸவசநத்தைத் தள்ளுகிறது. அவனுமவளுங்கூடி உபேயமென்னில் ஸ்ரீமான் ஒருவன் என்னவொண்ணாது, இரண்டென்னவேண்டும், இவ்விருவரும் ஸமப்ரதாநரென்னில் அவளுந்தனியே உபேயமாய் அவனும் தனியே உபேயமாய் விசிஷ்டம் உபேயம் என்னும் வார்த்தை விரோதிக்கும். ஆகையாலே அவனொருவனுக்கே உபேயபாவம் வ்யவஸ்திதமாயிருக்கும்' என்று உபாயத்வபாதகயுக்தியைக் கொண்டு பிராட்டிக்கு ப்ராப்யத்வத்தையுந் தள்ளிவிடலாமே. ஆகையால் உத்தரவண்டத்தில்போலவே பூர்வகண்டத்திலும் க்ரியாந்வயித்வரூபவிசேஷணத்வத்தை ஒப்புக்கொண்டு வ்யாக்யாநமே உசிதம். ஸ்ரீஆச்சான்பிள்ளைஸூக்திகளை வைபவாதங்கள் என்றோ வ்யாக்யாநதக்ஷிதங்களாயிருக்கலாமென்றோ இசைந்து ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திகளையே ஆதரிக்க ப்ராப்தம்.

ஏவம் சௌண்டீர்யஹோர்த்வஸுவநிகமகவிதார்க்ஷ்யஸூரே ஸ்தநதோஜா தவஷிஷ்டோ யஜ்வயஜ்வாஸியவிஷ்வயமணவம்ஸோ வம்ஶோஜ்ஜ்வலஸ்ய। ஸ்ரீமத்ஸ்ரீவாஸயோகிப்ரவரகருணயாஹவா ப்தவேதாந்தயுக்மோ ரக்ஷாவிமர்ஶம் வ்யதநுததநோ வீரராகவஶாஸ்த்ரீ ॥

நிகமாந்தநாயிகாயை நம: ॥

ரக்ஷாவிமர்ஶ: ஸமாப்த: ॥

---

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

---

ஸ்ரீமதுராந்தகம், திருமலை, ஈச்சம்பாடி.
வீரராகவாசாரியர்.

18912


ஸ்ரீ:

அத்யமே ச்லோகார்த்த நிர்ணம் என்கிற

**தத்வ ப்ரதிஷ்டா விமர்சம்.**

ஸ்ரீமான் V. S. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி (B. A.) யால் இயற்றப்பட்ட இப்புத்தகம் ஸமீபத்தில் சர்ச்சிக்கப்படுகிற 'அத்யமே' என்னும் ஸ்ரீமத்ராமாயணச்லோகத்தின் தாத்பரியத்தைஎளியதமிழில்வெகுஅழகாகஎடுத்துக்காட்டுகிறது. ஸ்ரீபரம பரிவ்ராஜக யதுகிரி யதிராஜஸம் பத்குமார ராமாநுஜஜீயர்ஸ்வாமி, ஸ்ரீமான்கள் அட்வகேட் A. V. கோபாலாசார்யஸ்வாமி M.A.B.L, அட்வகேட் C. நரஸிம்மாசார்யஸ்வாமி B.A.,B.L. இவர்களின் மதிப்புரைகளுடன் கூடியது. 84-பக்கங்கொண்டது. இதன் விலை அணா 6.

நம் ஸம்ரக்ஷிணீயின் சந்தாதாரர்களுக்குப் பாதிவிலைக்குக் கொடுக்க அந்த ஸ்வாமி இசைந்திருக்கிறார்.

ஸ்ரீ:

**உத்திரவாதமான**

வைரங்கள் முதலிய ரத்தினங்களால் செய்த பொன், வெள்ளி நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும், பெங்களூர், சேலம், மதுரை, காசி முதலிய பல ஊர் பட்டு, ஜவுளி தினுசுகளும் இங்கு கிடைக்கும்

தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்:—

**V. ராமய்யங்கார்,**
கவர்னிங் டைரக்டர்.

**ஸ்ரீ ஆண்டாள்**
**ஜுவெல்லரீஸ் லிமிடெட்,**
**109, சைனாபஜார் ரோட்,**
பைராகிமடம் கோவில் சமீபம்,
மதராஸ்

தேக ஆரோக்கியம் உங்களது
பிறப்பு உரிமையல்லவா?

**மஹாசந்தனாதித் தைலம்.**

அபார சக்தி வாய்ந்ததும், மூளைக்குச் சிறந்ததுமான தைலம் இது ஞாபகசக்தி யற்றவர்களுக்கும், மந்த மூளையுள்ளவர்களுக்கும் மனவருத்தம், பார்வை மந்தம், கண் எரிச்சல், தலைநோய், உச்சந்தலையில் தோல் உரிதல், வழுக்கைபோன்ற ஸகல நோய்களுக்கும் மிகச் சிறந்தது ஒரு மாதத்திற்கு உபயோகப்படக்கூடிய 12 அவுன்ஸ் கொண்ட புட்டி விலை ரூ 5

உங்கள் நரம்புகளையும் மூளையையும் பலப்படுத்த ஆயுர்வேத ரத்னம் பண்டிட் டாக்டர் என். வி. ஸ்ரீராமா சார்லு அவர்களின் பிரசித்தி பெற்ற திவ்விய ஔஷதங்களை சாப்பிடுங்கள்

**“சித்தகல்ப மகரத்வஜம்”** (ரிஜிஸ்டர்ட்)

எவ்வளவு கடினமான வியாதியானாலும் தவராது கண்டிப்பதில் பொன்னைப்போல் போற்றத் தக்கது மூளை வேலை செய்பவர்களுக்கு இது வரப்பிரசாதம் ரத்தத்தைச் சுத்தி செய்வதில் மிகப் பிரசித்தி பெற்றது பூராவும் குணமடைய 60 மாத்திரை கொண்ட புட்டி விலை ரூ 10

**மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்,**
**சென்னை.**

ஹெட் ஆபீஸ் 289, எஸ்பிளனேட்.
கிளை ஆபீஸ்.180, மவுண்ட்ரோட்.
தபால்பெட்டி 151
மதராஸ்
‘ரஸாயனசாலை ஸ்ரீராமபவனம்’
மைலாப்பூர்.
போன் 3034. தந்தி ‘கல்பம்’.

Printer:— M. K. Parthasarathi Iyengar,
Sri Komalamba Press, Kumbakonam.
Edited and Published at Srirangam by A. V. Gopalachariar,
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam